# நியாயப் பத்திரம்

## மக்களவைத் தேர்தல் - 2024

## இந்திய தேசிய காங்கிரஸ் தேர்தல் அறிக்கை


வெளியீடு:

திரு. கு. செல்வப்பெருந்தகை, எம்.எல்.ஏ.

தலைவர்,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

சத்தியமூர்த்தி பவன்

40, திரு.வி.க. சாலை, சென்னை-600002

நாள்: 08-04-2024

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **I. சம பகிர்வு** | **08** |
| சமூக நீதி | |
| மதம், மொழி சிறுபான்மையினர் | 11 |
| மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், | |
| மூன்றாம் பாலினத்தவர்கள் | 12 |
| சுகாதாரம் | 13 |
| **II. இளைஞர்கள்** | **15** |
| வேலைவாய்ப்பு | 15 |
| கல்வி | 16 |
| விளையாட்டு | 20 |
| **III. பெண்கள்** | **21** |
| மகாலக்ஷ்மி | 21 |
| பெண்களுக்கு அதிகாரம் | 22 |
| **IV. விவசாயிகள்** | **23** |
| மீன்பிடிப்பும் மீன்வ சமுதாயமும் | 25 |
| **V. பணியாளர்கள்** | **26** |
| **VI. அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாத்தல்** | **27** |
| குடியாட்சியைப் பாதுகாத்தல், அச்சத்தைப் போக்குதல், | |
| சுதந்திரத்தை மீட்டளித்தல் | |
| பாதிப்புகளைச் சரிசெய்தல் | 29 |
| ஊடகம் | 30 |
| நீதித்துறை | 31 |
| ஊழல் எதிர்ப்பு | 32 |
| கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமும் | 33 |
| **VII. பொருளாதாரம்** | **34** |
| நம்முடைய பொருளாதாரக் கொள்கை | |
| வேலைவாய்ப்பின்மை – கூக்குரலைச் செவிமடுத்தல் | 38 |
| வரி விதிப்பு மற்றும் வரி சீர்திருத்தம் | 40 |

தொழில் துறை 41
கட்டமைப்பு வசதி 43

**VIII. கூட்டாட்சி 45**

மத்திய–மாநில உறவுகள்
ஊரக மற்றும் நகர்ப்புற மேம்பாடு 47
வடகிழக்கு மாநிலங்கள் 48

**IX. தேசியப் பாதுகாப்பு 49**

இராணுவம்
உள்நாட்டுப் பாதுகாப்பு 51
வெளியுறவுக் கொள்கை 52

**X. சுற்றுச்சூழல் 54**

சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம், பேரிடர் மேலாண்மை 54
நீர் மேலாண்மை மற்றும் துப்புரவு 56
ஒரு வேண்டுகோள் 58




# அறிமுகம்

இந்திய தேசிய காங்கிரஸ் தனது 138 ஆண்டு பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்திய மக்களின் பிரச்சினைகள், வளர்ச்சி, விருப்பங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றோடு ஒன்றிணைந்து தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தின் போது, சுதந்திரத்தை வென்றெடுப்பதே காங்கிரசின் முதன்மையான நோக்கமாக இருந்தது. மகாத்மா காந்தி போன்ற மாபெரும் தலைவர்களின் விவேகத்தினாலும், தியாகங்களினாலும் காங்கிரஸ் வழி முதன்மையாகக் கொண்ட பொருளாதாரத்தில் பெரும் எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளையும் எங்களுடைய கொள்கைத் திட்டங்கள் கொண்டு வந்து சேர்த்தன. இந்தியா வளர்ச்சியடைந்தது. பஞ்சம் பாதித்திருந்த தேசத்தை உலக நாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யும் தேசமாக காங்கிரஸ் மாற்றியமைத்தது. உலகத்தின் மென்பொருள் சக்திக் கூடமாக இந்தியா உயர்வதற்கான அறிவியல், தொழில்நுட்ப அடித்தளத்தை அமைத்துக்

இந்திய அரசியல் சட்டம் நம்முடைய முடிவில்லாத பயணத்தில் தனித்த வழிகாட்டியாக, துணைவனாக நிச்சயமாக இருந்து வரும் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.



நடத்தப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு, பாபா சாகேப் அம்பேத்கர் முதன்மையானவராக இருந்து வடிவமைத்த அரசமைப்புச் சட்டத்தின் மீது முழுமையான நம்பிக்கையை காங்கிரஸ் கொண்டிருந்தது.

1947ஆம் ஆண்டு முதற்கொண்டு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக காங்கிரஸ் இருந்து வருகிறது. வேளாண்மையை கொடுத்தது. ஆராய்ச்சிக்கும், உயர்கல்விக்குமான உலகத்தரம் கொண்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கியது. இவற்றில் பயின்று பட்டம் பெற்றவர்கள் உலகில் தலைசிறந்து விளங்குபவர்களுக்கு இணையாக இருந்தனர். அடுத்தடுத்து வந்த காங்கிரஸ் அரசாங்கத்தால் தாராளமயமும், சீர்திருத்தங்களும் பொருளாதார வளர்ச்சியை பெருக்கமடையச் செய்த அதே வேளையில், நம்முடைய சமூகப் பாதுகாப்புத்

திட்டங்கள், ஒவ்வொரு இந்தியனும் இந்தியாவின் வெற்றி நடையில் பங்கேற்பதை உறுதி செய்தன.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு (UPA) உருவாக்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (MGNREGA), தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூக நலக் கட்டமைப்புகள் உலகளாவிய நிதி நெருக்கடி (2008) ஏற்பட்ட சமயத்திலும், வளர்ச்சியடைந்த சந்தைகளில் முதலீட்டாளர்கள் தங்களின் மூலதனத்தை பாதுகாப்பாக முதலீடு செய்த சமயத்திலும் (Taper Tandrum 2013), பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் போதும் (2016) கொரோனா பெருந்தொற்றுப் பரவலின் போதும் (2020) ஏற்பட்ட அதிர்ச்சிகளை இந்தியா தாங்கி நிற்பதை உறுதிப்படுத்தின.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 2019இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சி 54 பக்க தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. மோதி அரசாங்கத்தின் முதல் ஐந்தாண்டு கால ஆட்சியின் போது கடைப்பிடிக்கபட்ட நிலையற்ற கொள்கைகள் பற்றியும், உறுதியற்ற பொருளாதார நிலை பற்றியும், பிஜேபி/தேசிய ஜனநாயகக் கூட்டணியை மீண்டும் ஆட்சியில் அமர்த்தினால் ஏற்படக் கூடிய ஆபத்துகள் பற்றியும் மக்களை நாங்கள் முன்கூட்டியே எச்சரித்திருந்தோம். தேச நிலவரம் பற்றிய எங்களது கணிப்பு சரியானதுதான் என்று நிரூபணமானது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நம்முடைய பலவீனங்கள், துயரங்களில் பலவும் மிகவும் அதிகரித்திருக் கின்றன. 2019 தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் அளித்திருந்த வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் யாவும் மதிப்புமிக்கவையாகவும் இன்றுள்ள நிலைமைக்கு இருமடங்கு பொருத்தமுடைய தாகவும் இருந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை. எனவே, எங்களுடைய 2019ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையை வலியுறுத்து வதோடு, இந்தத் தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியாக முந்தைய அறிக்கையும் படித்துப் பார்க்குமாறு உங்களை வேண்டிக் கொள்கிறோம்.

நாங்கள் அளித்திருந்த முன்னெச்சரிக்கை களை இங்கே நாங்கள் நினைவுகூர்கிறோம்.

- “இளைஞர்கள் வேலை இழந்திருக் கிறார்கள்” என்று நாங்கள் கூறியிருந் தோம். இந்தியாவில் இப்போது வேலையின்மை விகிதம் 8 சதவீதம். பட்டதாரி இளைஞர்களின் மத்தியில் வேலையின்மை விகிதம் 40 சதவீதம்.
- “விவசாயிகள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்” என்று நாங்கள் குறிப்பிட் டிருந்தோம். மூன்று வேளாண் சட்டங் களை நீக்கக் கோரி விவசாயிகள் வீதிக்கு வந்து 16 மாத காலம் போராடினார்கள். பெருநிறுவனங்களின் குத்தகை விவசாயி களாக இந்தச் சட்டம் தங்களை மாற்றி விடும் என்பது அவர்களின் அச்சம். விவசாயிகள் மீண்டும் வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
- “வர்த்தகர்கள் தங்களின் வர்த்தகத்தை இழந்துவிட்டார்கள்” என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டங்கள் பல லட்சக்கணக்கான வர்த்தகர்களிடமிருந்து அளவுக்கு அதிகமான வரியைக் கறந்து வர்த்தகத்தை முடக்கிவிட்டன.
- “குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) நம்பிக்கை இழந்துவிட்டன” என்று நாங்கள் அறிவித்திருந்தோம். பல லட்சக்கணக்கான இந்நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன. அவற்றால் வேலைவாய்ப்புகளை வழங்க முடியவில்லை.
- “பாதுகாப்பாக வாழ்கிறோம் என்ற உணர்வை பெண்கள் இழந்து விட்டார்கள்” என்று நாங்கள் கூறியிருந் தோம். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 2014 முதல் 2022 வரை 31 சதவீதம் அதிகரித்திருக்கின்றன.
- “ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் பொருளாதார உரிமைகளை இழந்து விட்டார்கள்” என்று நாங்கள் தெரிவித்

திருந்தோம். அரசாங்கப் பணியிடங்களும் பொது நிறுவனப் பணியிடங்களும் நிரப்பப்படாத காரணத்தால் பட்டிய லினத்தவர் (SC) பழங்குடியினர் (ST) இதர பிற்பட்ட வகுப்பினருக்கு (OBC) வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளன. வன உரிமைச் சட்டத்தின்படியான உரிமைகள் பழங்குடி மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

- "அமைப்புகள் தங்களின் சுதந்திரத்தை இழந்துவிட்டன" என்று நாங்கள் கூறியிருந்தோம். அரசியல் சட்ட அமைப்புகள் உட்பட அனைத்து அமைப்புகளும் குறைவான சக்தி யுடையதாக மாற்றப்பட்டுவிட்டன. சில சமயங்களில் அவை அரசாங்கத்திற்கு ஏவல் புரியும் அமைப்புகளாக ஆக்கப் பட்டிருக்கின்றன.
- கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அச்ச உணர்வு, வெறுப்புணர்வு, மிரட்டல் ஆகியவை எங்களது மிகப்பெரிய கவலைகளாக இருந்தன. மக்களில் ஒவ்வொரு பிரிவினரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். சட்டங்களும், விசாரணை அமைப்புகளும் மக்களை மிரட்டுவதற்கு படைக்கலம் ஏந்தி பவனி வருகின்றன. பிஜேபியும் அதனோடு இணைந்திருக்கும் அமைப்புகளும் தங்களின் சொல்லாலும் செயலாலும் பல்வேறுபட்ட மதங்கள், மொழிகள், சாதிப் பிரிவுகளைக் கொண்டுள்ள மக்கள் குழுக்களிடம் வெறுப்பைப் பரப்பி வருகின்றன.
- நாங்கள் எச்சரிக்கை விடுத்திருந்த ஆபத்துகள் இன்று உண்மையிலேயே நம்மைச் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றன.

உலகத்தில் அதிவேகமாக முன்னேற்றம் கண்டுவரும் நாடு இந்தியா என்ற பிரச்சாரத்திற்கு மத்தியிலும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2004இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது இருந்த 6.7 சதவீத வளர்ச்சியிலிருந்து வீழ்ச்சி கண்டு 2014-24இல் 5.9 சதவீதமாக ஆகியிருக்கிறது. பொருளாதார பலத்தை இரட்டிப்பாக்குவது (ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி இதனை சாதித்துக் காட்டியிருந்தது) என்ற இலக்கு நடைமுறையில் இருக்கும் நிலையிலும் கூட, இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2013-14இல் இருந்த ரூ.100 லட்சம் கோடி என்ற அளவிலிருந்து, 2023-24இல் ரூ.173 லட்சம் கோடி என்ற சொற்ப வளர்ச்சியையே கண்டுள்ளது. இலக்கை அடைவதிலிருந்து வெகு தொலைவில் இது நம்மை வைத்துள்ளது.

வளர்ச்சி விகிதத்தில் காணப்படும் வீழ்ச்சி, மக்களுக்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. அதிலும் குறிப்பாக ஏழைகளுக்கும் நடுத்தரப் பிரிவினருக்கும் அதிகமான பாதிப்புகளை உருவாக்கக் கூடியது. தனிநபர் வருவாயில் காணப்படும் வீழ்ச்சியானது பொருள்கள், சேவைகளின் நுகர்விலும், வாழ்க்கைத் தரத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குடும்பங்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்புகள் சரிந்து, கடன் பொறுப்புகள் அதிகரித்திருக்கின்றன. குடும்பங்களின் கடன் சுமை அதிகமாக ஆகியிருக்கிறது.

தாமஸ் பிக்கெட்டி அறிக்கை உட்பட, "இந்தியாவில் வருமானமும் சொத்துக்களில் சமமின்மையும் 1922-2023: பெரும் பணக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு" என்ற உலகத்தின் முன்னணி பொருளாதார நிபுணர்களின் அறிக்கை வரையிலும் பணக்காரர்களுக்கும் ஏழைகள், நடுத்தரப் பிரிவினருக்குமான சமப்பகிர்வின்மை மிகக் கூர்மையாக அதிகரித்து வருவதாகவும்; சமத்துவம், சமபங்கீடு, சமூக, பொருளாதார நீதிகள் கடுமையான தாக்கத்தை அடைந்துள்ளன என்றும் தெரிவிக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இருந்ததைக் காட்டிலும் சமமின்மை அதிகம் உடையதாக பிரதமர் மோடியின் ஆட்சியில் இந்தியா உருவாகி இருக்கிறது என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்தியாவின் உயர்நிலையிலுள்ள ஒரு சதவீத நபர்களுக்கு தேசிய வருமானத்திலிருந்து கிடைத்துவரும்

பங்கு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகமாக இருக்கிறது, உலக அளவில் அதிகமானதாகவும் இது இருக்கிறது. சமமின்மையின் அதிகரிப்பு குறிப்பாக 2014-2023 காலகட்டத்தில் வெளிப்படையாகத் தெரிகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள செயல்பாட்டிலிருப்பவர்களின் எண்ணிக்கையும், இலவசமாகக் கிடைக்கும் மாதம் 5 கிலோ உணவு தானியத்தை சார்ந்தே 80 கோடி மக்கள் இருந்துவருவதும் பரவலாக காணப்படும் வறுமைக்குச் சான்றுகளாகும். உலகப் பசிக்குறியீட்டில் இந்தியா 125 நாடுகளில் 111வது இடத்தில் இருக்கிறது.

இந்தியா இனியும் ஒரு சுதந்திரமான ஜனநாயக நாடாக இல்லாமல் போய்விடுமோ என்ற மிகப்பெரிய அச்சமும் ஆபத்தும் சூழ்ந்திருக்கின்றது. இந்தியாவின் குடியாட்சி முறைக்குக் குழி பறிக்கப்பட்டு ஒரு கட்சி ஆட்சி, ஒரு மனிதனின் சர்வாதிகாரம் என்ற நிலைமைக்கு நாம் மிக வேகமாகச் சரிந்துகொண்டிருக்கிறோம். பெரும்பாலான ஒன்றிய வருவாயை ஒன்றிய அரசாங்கம் எடுத்துக்கொள்வதும், மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இதுவரை இருந்துவரும் பகுதிகளில் ஒன்றிய அரசு சட்டங்கள் இயற்றுவதும், மாநிலங்களின் நிதி அதிகாரத்தையும் ஆட்சி அதிகாரத்தையும் தன்வசமாக்கிக் கொண்டு அவற்றை முனிசிபாலிட்டியின் நிலைக்குத் தரம் தாழ்த்தி வருவதும் கூட்டாட்சிக் கட்டமைப்பிற்கு எதிரான தாக்குதல்களாகும். பிஜேபி அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இருக்கும் ஆளுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் செயல்பாடுகளை முடக்குவதற்கு உற்சாகமளிக்கப்பட்டு வருகிறது. பிஜேபி அல்லாத அரசியல் கட்சியினர் மீது பொய் வழக்குகளைப் போட்டு பிஜேபியின் விருப்பத்திற்கு அவர்களைப் பணிந்து போகும்படி செய்வதற்கு சட்டங்களும், விசாரணை அமைப்புகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.




## உங்களுக்கு நீங்களே இரண்டு கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்

(1) 2014ஆம் ஆண்டில் இருந்ததை விடவும் உங்களது வாழ்க்கை இப்போது சிறப்பானதாக உள்ளதா?

(2) ரவீந்திரநாத் தாகூர் கனவு கண்டதைப் போல உங்களது மனங்கள் அச்சமற்று இருக்கின்றனவா?

காங்கிரசா? பிஜேபியா? என்பது தெரிவல்ல. அதைவிடவும் பெரியது உங்களுடைய தெரிவு

ஜனநாயக ஆட்சியா? அல்லது சர்வாதிகார ஆட்சியா?

சுதந்திரமா அல்லது அச்சமா?

அனைவருக்கும் செழிப்பான வாழ்வா அல்லது ஒரு சிலருக்கு மட்டும் சொத்து சேர்வதா?

### நீதியா அல்லது அநீதியா?

கடந்த பத்தாண்டு கால அநியாய காலத்தின் அரசாட்சி பாணியையும் சாராம்சத்தையும் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான ஒரு வாய்ப்பினை, இந்த 2024 பொதுத் தேர்தல் வழங்குகிறது. மதம், மொழி, சாதி இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு நின்று இந்திய மக்களுக்காக உழைத்திடும் ஜனநாயக அரசாங்கத்தை புத்திசாலித்தனத்துடன் தேர்ந்தெடுத்து அமைத்திடுமாறு உங்களை வேண்டிக் கொள்கிறோம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

## சம பகிர்வு



### சமூக நீதி

பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக கடந்த எழுபது ஆண்டுகளாக குரல் கொடுத்துவரும் துடிப்புமிக்க முதன்மை வீரனாக காங்கிரஸ் எப்போதும் திகழ்ந்து வருகிறது. இருந்த போதிலும் சாதிப் பாகுபாடு மாறாத ஒரு எதார்த்தமாகவே சமூகத்தில் இன்னமும் இருந்து வருகிறது. பட்டியலின, பழங்குடி, இதர பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களால் மற்ற கட்சிகளோடு இணைந்து பயணிக்க இயலவில்லை. பிற கட்சிகள் இதில் இன்னமும் பின்தங்கியே இருக்கின்றன. இந்தியாவின் மக்கள்தொகையில் 70 சதவீதம் இதர பிற்பட்டோரும், பட்டியலினத்தவரும், பழங்குடியினருமே இருக்கின்றனர். உயர் நிலையில் உள்ள பதவிகள், தொழில்கள், சேவைகளில் இவர்களின் எண்ணிக்கைக்கு முற்றிலும் பொருத்தமற்ற வகையில் மிகவும் குறைவான அளவிலேயே இவர்கள் இருந்து வருகின்றனர். முன்னேறிவரும் எந்த நவீன சமூகமும் காலகாலமாக வாய்ப்புகள் மறுக்கப்படும் இத்தகைய சமத்துவமின்மை அல்லது பாகுபாட்டினை சகித்துக் கொள்ளாது. வரலாற்று ரீதியான இத்தகைய சமத்துவமின்மையை பின்வரும் திட்டங்களைச்

செயல்படுத்துவதன் மூலம் காங்கிரஸ் சீர்படுத்தும்.

1. தேசம் தழுவிய சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரிக் கணக்கெடுப்பினை காங்கிரஸ் நடத்தும். சாதிகள், உள்சாதிகள், அவர்களின் சமூக-பொருளாதார நிலைமைகள் கணக்கெடுக்கப்படும். இந்தத் தரவுகளின் அடிப்படையில் உறுதியான நடவடிக்கைகள் வலுவாக எடுக்கப்படும்.

2. பட்டியலினத்தவர். பழங்குடிகள், இதர பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்ற வரம்பை அதிகரிப்பதற்கு அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என காங்கிரஸ் உறுதியளிக்கிறது.

3. கல்வி நிறுவனங்களிலும் வேலைகளிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு வழக்கப்படும் ஒதுக்கீடு, அனைத்து சாதிகள், சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பாகுபாடின்றி விரிவாக்கப்படும்.

4. பட்டியலினத்தவர். பழங்குடிகள், இதர பிற்பட்டோருக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பாமல் விடப்பட்டிருக்கும் பழைய பணியிடங்கள் ஓராண்டுக்குள் நிரப்பப்படும்.

5. அரசுத் துறைகளிலும், பொதுத்துறைகளிலும் ஒப்பந்தப் பணிமுறை அகற்றப்பட்டு, நியமனங்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

6. வீடு கட்டவும், தொழில் தொடங்கவும், சொத்துக்கள் வாங்கவும் பட்டியலினத்தவர், பழங்குடியினருக்கு நிறுவனக் கடன்கள் அதிகரிக்கப்படும்.

7. அரசு நிலங்கள், நில உச்சவரம்பு சட்டத்தின்படி கிடைக்கும் கூடுதல் நிலங்கள் ஆகியவை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கண்காணிக்க ஒரு அதிகார அமைப்பை காங்கிரஸ் ஏற்படுத்தும்.

8. பொதுக் கொள்முதல் கொள்கையின் வரம்பெல்லை விரிவாக்கப்பட்டு பொதுப்பணித்துறை ஒப்பந்தங்கள் அதிகமான அளவில் பட்டியலின, பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும்.

9. பட்டியலினத்தவர், பழங்குடிகள், இதர பிற்பட்டோருக்கான கல்வி உதவித் தொகைக்கான நிதி, குறிப்பாக உயர் கல்விக்கான நிதி இரட்டிப்பாக்கப்படும். பட்டியலினத்தவர், பழங்குடியின மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில்வதற்கு உதவிகள் செய்யப்படும். முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கு உதவித்தொகை பெறும் இத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும்.

10. ஏழைகளுக்கு குறிப்பாக பட்டியலின. பழங்குடி மாணவர்களுக்கான உறைவிடப் பள்ளிகளின் கட்டமைப்பு ஒவ்வொரு வட்டாரத்திலும் உருவாக்கப்படுவதை காங்கிரஸ் உறுதி செய்யும்.

11. சமூக நீதி பற்றிய கருத்துகளைப் பரப்பு வதற்காக பள்ளிப் பாடத்திட்டங்களில் சமூக சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கையும், பணிகளும் சேர்க்கப்படும்.

12. படிக்கும் பழக்கத்தை உருவாக்கவும், விவாதிக்கும் இயல்பை உருவாக்கவுமாக நூலகங்களுடன் இணைந்த அம்பேத்கர் பவன்களை நாங்கள் உருவாக்குவோம்.

13. பட்டியலினத்தவர், பழங்குடிகள், இதர பிற்பட்டோருக்கான இடஒதுக்கீடு அரசமைப்புச் சட்டப் பிரிவு 15(5) இன் படி தனியார் கல்வி நிறுவனங்களிலும் வழங்கப்படுவதற்கான சட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவோம்.

14. பட்டியலினத்தவருக்கான, பழங்குடி யினருக்கான துணைத் திட்டத்திற்கும் வருடாந்திர அரசு பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவதற்கு இடமளிக்கும் சட்டத்தைக் கொண்டுவருவோம்.

15. கைகளினால் மலம் அள்ளும் வழக்கத்தை காங்கிரஸ் முடிவுக்குக் கொண்டுவரும். இத்தகைய பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் மறுதிறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, மறுவாழ்வு வழங்கப் படும். வேலைக்கும் கண்ணியமான பாதுகாப்பான வாழ்க்கைக்கும் அவர்களுக்கு உறுதியளிக்கப்படும். கைகளால் மலம் அள்ளுவதைத் தடை செய்யும் 2013ஆம் ஆண்டின் சட்டம் கண்டிப்புடன் நிறைவேற்றப்படும். இத்தகைய பணிகளில் மனிதர்களை ஈடுபடுத்தும் எவரும் தண்டிக்கப் படுவார்கள். பணியின்போது இறக்க நேரிடும் துப்புரவுப் பணியாளர்களின் (safai karamcharis) குடும்பத்திற்கு 30 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும். மனிதக் கழிவுகளை நீக்குவதற்கும், கழிவுநீர்த் தடங்கள், கழிவுநீர்த் தொட்டிகளிலிருந்து கழிவுகளை நீக்கவும் கருவிகள் வாங்குவதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படும். அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் இலவசக் காப்பீடு வழங்கப்படும்.

16. பட்டியலினத்தவர், பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புச்சட்டம் 1989 அக்கறையுடன் அமுல்படுத்தப்படும். ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் உதவி மையம் உருவாக்கப்பட்டு வன்கொடுமைக்கு ஆளாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவிகளும், சட்டத் துணை உதவிகளும் செய்யப்படும்.

17. அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் தற்போது அறிவிக்கப்பட்டிருப்பவை தவிர, பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கும் மற்ற பகுதிகளையும் பட்டியலிடப்பட்ட பகுதிகளாக அறிவிப்பதற்கு காங்கிரஸ் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது.

18. வன உரிமைச் சட்டம் 2006 திறமையாகச் செயல்படுத்தப்படுவதற்கு, வன உரிமை சிறப்புச் சட்டப் பிரிவின் வாயிலாக ஒரு தேசிய ஆணையம் அமைக்கப்படும். இதற்கென தனி நிதி ஒதுக்கீடும், செயல்திட்டமும் இருக்கும்.

19. வன உரிமைச் சட்டப்படி இதுவரை கோரப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளும் தீர்த்து வைக்கப்படுவதை காங்கிரஸ் உறுதி செய்யும். நிராகரிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் அனைத்தும் ஆறு மாத காலத்திற்குள் மறுபரிசீலனை செய்யப்படும்.

20. கிராமக் குழுக்களையும், தன்னாட்சி கொண்ட மாவட்டக் குழுக்களையும் அமைப்பதற்கு ஏதுவாக மத்திய பஞ்சாயத்து (பட்டியலிடப்பட்ட பகுதிகளுக்கு விரிவாக்கம்) சட்டம் 1996 (PESA)க்கு இசைவான வகையில், மாநிலங்கள் சட்டங்கள் இயற்றுவதை உறுதி செய்வதற்கு காங்கிரஸ் உறுதிபூண்டுள்ளது.

21. கல்வி நிறுவனங்களில் பாகுபாடுகளை எதிர்கொள்ளும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவி புரிவதற்காக ரோகித் வெமுலா சட்டத்தை நாங்கள் கொண்டுவருவோம்.

22. ரெங்கே ஆணையத்தின் பரிந்துரைகளை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். நாடோடிப் பழங்குடிகள், குற்றப்பரம்பரை நீக்கம் செய்யப்பட்ட பழங்குடிகளின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியை நாங்கள் வழங்கிடுவோம்.

23. அரசுப்பணிகளிலும் தனியார் பணிகளிலும் கல்வியிலும் பன்முகத்தன்மையை மேம்படுத்தி அதனைக் கண்காணித்து வருவதற்கென பன்முகத்தன்மை ஆணையத்தை காங்கிரஸ் நிறுவும்.

- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 15, 16, 25, 26, 28, 29, 30 ஆகியவற்றில் உறுதியளித்துள்ளபடி ஒவ்வொருவரின்

## மத, மொழிச் சிறுபான்மையினர்

பலவிதமான மதங்கள் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கின்றன. வரலாற்றைத் திரிக்க இயலாது. இந்தியாவில் வசிக்கும் அனைத்து மக்களும், இந்தியாவில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றுவது உட்பட மனித உரிமைகள் அனைத்தையும் பெறுவதற்கு சமமான உரிமையுடையவர்களாவர். வேறுபட்ட தன்மைகளும் பன்முகத் தன்மையும் இந்தியாவின் மரபைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இவை பொதிந்துள்ளன. இந்தியாவின் வரலாறு, ஜனநாயகப் பாரம்பரியம் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது எதேச்சதிகாரத்திற்கோ, பெரும்பான்மையின் ஆதிக்கத்திற்கோ இடமில்லை என்று காங்கிரஸ் நம்புகிறது.

நம்பிக்கையையும், மதச் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள உறுதிகளையும் உரிமைகளையும் நாங்கள் மதிக்கிறோம்.

- அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 15, 16, 29, 30 ஆகியவற்றில் உறுதியளித்துள்ளபடி மொழிச் சிறுபான்மையினருக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகளை நாங்கள் மதிக்கிறோம், அவற்றை உயர்த்திப் பிடிக்கிறோம்.
- கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்கள், சேவைகள், விளையாட்டு, கலைகள், இன்னும் பிற பிரிவுகளில் வளர்ந்து வருவதற்கான முழுமையான சாதகங்களை சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் பெறுவதற்கு ஊக்குவித்து உதவிகள் செய்வோம்.
- கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதத்தில் வெளிநாடுகளில் சென்று படிப்பதற்கு மௌலானா அபுல்கலாம் ஆசாத் உதவித்தொகையை மீண்டும் கொணர்வோம்.
- சிறுபான்மையினருக்குப் பொருளாதார அதிகாரமளித்தல் என்பது இந்தியா தனது ஆற்றலை முழுமையாகப்



பயன்படுத்திக் கொள்வதற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் ஒரு நடவடிக்கையாகும். சிறுபான்மையினருக்கு வங்கிகள் பாகுபாடின்றி நிறுவனக் கடன்கள் வழங்குவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.
- கல்வி, சுகாதாரம், அரசு வேலைவாய்ப்பு, பொதுப்பணி ஒப்பந்தங்கள், திறன் மேம்பாடு, விளையாட்டு, பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் பாரபட்சமின்றி தங்களுக்குரிய பங்கினை சிறுபான்மையினர் பெறுவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.
- அனைத்து குடிமக்களையும் போலவே சிறுபான்மையினரும் அவர்களுக்கு விருப்பமான உடைகளை உடுத்திக் கொள்வதையும், விருப்பமான உணவை உண்பதையும், தனிநபர் சட்டங்களைப்

பின்பற்றுவதையும் நாங்கள் உறுதி செய்வோம்.

- தனிநபர் சட்டங்களில் சீர்திருத்தங்களை நாங்கள் ஊக்குவிப்போம். தொடர் புடைய சமூகங்களின் பங்கேற்புடனும், ஒப்புதலுடனும் மட்டுமே இத்தகைய சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும்.

- அரசமைப்பு சட்டத்தின் எட்டாவது பட்டியலில் இன்னும் அதிகமான மொழிகளைச் சேர்க்கவேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்று வதற்கு காங்கிரஸ் உறுதி அளிக்கிறது.

# மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்கள்



1. தேசிய சமூக உதவித்திட்டத்தில் மூத்த குடிமக்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான மத்திய அரசின் ஓய்வூதியப் பங்களிப்பு ரூ.200 முதல் ரூ.500 ஆக இருந்து வருகிறது. இந்தப்பங்களிப்பை காங்கிரஸ் ரூ. 1,000 ஆக உயர்த்தி அளிக்கும்.

2. மூத்த குடிமக்களைப் புறக்கணித்தல், அவதூறு செய்தல், கைவிடுதல், வீட்டைவிட்டு வெளியேற்றுதல், பண மோசடி ஆகியவை நேரிடும் போது மூத்த குடிமக்களுக்கு சட்டச் சேவைகள் எளிதாகக் கிடைப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்..

3. பெற்றோர், மூத்தகுடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007இல் உள்ள குறைபாடுகள் பற்றி மறுஆய்வு செய்து குறைகள் நீக்கப்படும்.

4. மூத்த குடிமக்களுக்கு பொதுப் போக்குவரத்திலும், ரயிலிலும் பயணச் சலுகைகள் மீண்டும் வழங்கப்படும்.

5. உடல் குறைபாடு, உடல் உறுப்புகளின் ஆற்றல் குறைபாடு, தன்பாலின ஈர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை தடை செய்யும் விதத்தில் அரசியல்சட்டப் பிரிவுகள் 15, 16 ஆகியவை விரிவுபடுத்தப்படும்.

6. பார்வையற்றோர் படித்தறியும் பிரெய்லி எழுத்து முறையும் அவர்களுக்கான சைகை மொழியும் அங்கீகரிக்கப்படும்

7. சிறப்புக் குழந்தைகளுக்கான தேசிய ஆராய்ச்சி மற்றும் நல மையம் அமைக்கப்பட்டு சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கும், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

8. சத்திஸ்கரில் நடைமுறைப்படுத்தப் படுவதைப்போல உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும்

9. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016 கடுமையாகச் செயல்படுத்தப்படும்.

10. நாடு முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு பராமரிப்பு மையங்களை அரசு - தனியார் பங்களிப்புடன் அமைப்பதற்கான திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம்.

11. தன்பாலின ஈர்ப்பு கொண்டுள்ள இணையர்களுக்கு அங்கீகாரமளிக்கும் சட்டம் விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு இயற்றப்படும்.

# சுகாதாரம்

மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளைச் செய்கிற பொறுப்பு ஓர் அரசுக்கு இருப்பதை அங்கீகரித்த முதல் அரசியல் கட்சி காங்கிரஸ் கட்சிதான்.

மக்கள் நலனுக்கான மருத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதை உரிமை ஆக்கியதும் காங்கிரஸ் கட்சிதான்.



1. மருத்துவமனைகள், சிகிச்சையகங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், நடமாடும் உடல்நல அலகுகள், மருந்தகங்கள், சுகாதார முகாம்கள் ஆகியவற்றில் சுகாதார உதவி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். இலவச மருத்துவ உதவி என்பது பரிசோதனை, நோயறிதல், சிகிச்சை, அறுவைச் சிகிச்சை, மருந்துகள், மறுவாழ்வு, வலி தணிப்பு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

2. ராஜஸ்தான் மாதிரியிலான பணமில்லாக் காப்பீடு முறை அனைவருக்குமான

சுகாதரா உதவியில் ரூ.25 லட்சம் வரையிலும் கடைபிடிக்கப்படும்.

3. ஆரம்ப சுகாதர மையங்கள் (PHC) இந்தியப் பொது சுகாதாரத் தர நிலைகளுக்கு ஏற்ற வகையில் தரம் உயர்த்தப்படும். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நோயறிதல் சேர்க்கப்படும்.

4. தனியார் துறைகளிலும், பொதுத் துறைகளிலும் உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதை நாங்கள் ஊக்குவிப்போம். பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கு ஏற்ற விதத்தில் தற்போதுள்ள அனைவருக்குமான சுகாதாரத் திட்டம் மாற்றியமைக்கப்படும். தனியார் மருத்துவமனைகள், லாப நோக்கமில்லாத உடல்நல மையங்கள் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

5. மகப்பேறு சலுகைகள் அனைத்துப் பெண்களுக்கும் கிடைக்கும். பணிவழங்கும் அனைவரும் தங்களின் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பினைக் கட்டாயம் வழங்க வேண்டும்.

6. 2028-29ஆம் ஆண்டில் மொத்த செலவினத்தில் 4 சதவீதத்தை எட்டும் வகையில் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிக்கப்படும்.

7. கிராமங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கான கடினப்பணி உதவித்தொகை இரட்டிப்பாக்கப்படும். பொருத்தமான இருப்பிட வசதிகள் மருத்துவர்களுக்கு வழங்கப்படும்.

8. ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவுத்திட்ட சமையல்காரர்கள் போன்ற முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு மத்திய அரசின் ஊதியப் பங்களிப்பு இரட்டிப்பாக்கப்படும்.

9. மருத்துவமனையுடன் சேர்ந்த ஒரு அரசு மருத்துவக்கல்லூரி ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்படும்

10. பொது சுகாதார நிறுவனங்களில் மருத்துவப் பணியிடங்கள், துணை மருத்துவப் பணியிடங்கள், மருத்துவக் கல்லூரி பணியிடங்கள் ஆகியவை மூன்று ஆண்டுகளில் நிரப்பப்படும்.

11. மருத்துவ, துணை மருத்துவப் பணியிடங்கள், ஆசிரியப் பணியிடங்கள் 75 சதவீதம் நிரப்பப்பட்டால் மட்டுமே மருத்துவமனைகளோ, மருத்துவக் கல்லூரிகளோ செயல்பட அனுமதிக்கப்படும்.

12. தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும். அதிலுள்ள முரண்களும் குறைகளும் களையப்படும். இந்தச் சட்டத்தின் கீழ் கடமைகளை ஆற்றுவதற்கான முழுமையான தன்னாட்சியை தேசிய மருத்துவ ஆணையம் பெறும்.

13. 2500க்கும் அதிகமான மக்கள்தொகை உள்ள கிராமங்களில் இரண்டாவது ஆஷா அமைக்கப்படும்.

14. அனைத்து மருத்துவ முறைகளும் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும்

15. மருந்து தயரிப்பாளர்கள் அனைவரும் தரத்தையும் சிறப்பான தயாரிப்பு முறைகளையும் கடைப்பிடிப்பது கடுமையாக கண்காணிக்கப்படும்

16. மத்திய அரசு மருந்தகங்களின் எண்ணிக்கை அதிகமாக விரிவுபடுத்தப்படும். மத்திய அரசாங்க மருந்தகங்கள் அனைத்தும் வணிக முத்திரை கொண்ட மருந்துகளையும், மருந்துகளின் பெயர்களைக் கொண்டிருக்கும் தரமான ஜெனிரிக் மருந்துககளையும் நியாயமான விலையில் வழங்கும்.

17. தேசிய தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்படும். 75 சதவீத இந்தியக் குழந்தைகள் மட்டுமே அனைத்து தடுப்பூசிகளையும் பெறுகின்றனர். அனைத்து குழந்தைகளும் அனைத்து தடுப்பூசிகளையும் பெறுவதை ஐந்து ஆண்டு காலத்திற்குள் காங்கிரஸ் உறுதி செய்திடும்.

18. வளர்ச்சி குன்றிய நிலை, எடைகுறைவு ஆகிய நேர்வுகளைக் குறைப்பதற்காக குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை சரி செய்வது பற்றி கவனத்தில் கொள்ளப்படும் மதிய உணவுத் திட்டம் பிளஸ் 2 வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும்

19. மருத்துவர்கள், பிற சுகாதார வல்லுநர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும் போது அவர்களுக்கு எதிராக வன் செயல்களில் ஈடுபடுவதைக் குற்றச்செயலாக்கும் வண்ணம் சட்டம் இயற்றப்படும்.

# இளைஞர்கள்



## வேலைகள்

"இன்றைய இளைஞர்களின் கைகளில் தான் எதிர்காலம் இருக்கிறது." 28 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் அதிகமாக இருக்கும் இந்தியா போன்ற தேசத்திற்கு இந்தக் கூற்று மிகவும் பொருத்தமானது. இந்திய இளைஞர்கள் வேலையின்மையையும், நம்பிக்கையின்மை யையும் எதிர்கொண்டு வருகின்றனர். இதற்குக் காரணம் பெருமளவிலான வேலையின்மையே ஆகும். இந்த நிலைமை பிஜேபி/ தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் கீழ் மோசமாகிக் கொண்டே வருகிறது. இந்தப் பிரச்சினையை 'இளைஞர்களுக்கான நியாயம்' என்ற தெளிவான திட்டத்தின் மூலம் போர்க்கால அடிப்படையில் காங்கிரஸ் சமாளிக்கும்.

- பட்டயப் படிப்பு, பட்டப்படிப்பு முடித்திருக்கும் 25 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொருவரும் தனியார்துறை, பொதுத் துறை நிறுவனங்களில் ஒரு ஆண்டு பயிற்சி பெறுவதற்கு புதிய தொழில் பயிற்சி உரிமைச்சட்டம் கொண்டு வரப்படும். பயிற்சியாளர்கள் ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் பெறுவார்கள். திறன்களைப் பெறவும், வேலைக்குரிய வர்களாக மாறவும், முழுநேர வேலை

வாய்ப்புகளை பல லட்சக்கணக்கான இளைஞர்கள் பெறவும் இந்த வகையான பயிற்சி உதவிடும்.

- வினாத்தாள் வெளியாதல் போன்ற பணியாளர் தேர்வு முறைகேடுகளை விசாரிக்க விரைவு நீதிமன்றம் அமைக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.
- மத்திய அரசுப்பணிகளில் உள்ள அனுமதியளிக்கப்பட்ட 30 லட்சம் காலியிடங்களை நாங்கள் நிரப்புவோம். அந்தந்த மாநில அரசுகளுடன் கலந்து பேசி உள்ளாட்சிகளில் உள்ள பணியிடங்கள் குறித்த காலத்தில் நிரப்பப்பட்டாக வேண்டும் என்பதை நாங்கள் நிர்ணயம் செய்வோம்.
- நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் சொந்தத் தொழில் துவங்கி வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு தொடக்கத் தொழில் நிதியுதவித்திட்டம் உருவாக்கப்படும். தற்போதுள்ள தொடக்கத் தொழில் நிதியுதவித் திட்டத்தை மறுநிர்ணயம் செய்து, இருக்கும் நிதியில் 50 சதவீதத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்போம்.
- கொரோனா நோய்த் தொற்றுப்பரவலின் காரணமாக ஏப்ரல் 1, 2020 முதல் ஜூன் 30, 2021 வரை நடைபெற்ற பொது தேர்வுகளை எழுத முடியாமல் போனவர்களுக்கு ஒருமுறை நிவாரணத்தை அரசு வழங்கும்
- அரசுத் தேர்வுகளுக்கும், அரசுப் பதவிகளுக்கான தேர்வுகளுக்குமான விண்ணப்பக் கட்டணங்களை நாங்கள் ரத்து செய்வோம்.
- மிகவும் பரவலாகக் காணப்படும் வேலையின்மையைக் கருத்தில் கொண்டு மார்ச் 15, 2024ஆம் ஆண்டு நிலவரப்படி திரும்பச் செலுத்தப்படாமல் இருக்கும் கல்விக்கடன் நிலுவைத் தொகையும், வட்டித் தொகையும் ஒருமுறை நிவாரணமாக அனைத்து மாணவர்களுக்கும் ரத்து செய்யப்படும். அரசாங்கம் இந்தத் தொகையைக் வங்கிகளுக்குக் கொடுத்துவிடும்.
- விளையாட்டுகளுக்கான உதவித்தொகையாக, 21 வயதிற்கு கீழ் உள்ள வளர்ந்து வரும் திறமையான விளையாட்டு வீரருக்கு மாதம் ரூ.10,000 உதவித் தொகையை காங்கிரஸ் வழங்கிடும்.

# கல்வி

1. காங்கிரஸ் கொண்டுவந்த கல்வி உரிமைச் சட்டம் 2009, ஆறு முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வாழ்க்கையை மாற்றியமைத்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் கட்டாய இலவச கல்வி அளிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும்.
2. பிஜேபி/ தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அறிவித்திருக்கும் புதிய கல்விக்கொள்கைக்கு கல்வியாளர்களும் பல்வேறு மாநில அரசுகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் இருக்கிறது. கல்விக் கொள்கைகளை வடிவமைப்பதற்கான மாநில அரசுகளின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எனவே நாங்கள் மாநிலங்களுடன் ஆலோசித்து புதியக் கல்விக் கொள்கையைத் திருத்தியமைப்போம்.
3. வெவ்வேறு காரணகளுக்காக சிறப்புக் கட்டணங்களை வசூலிக்கும் பொதுப் பள்ளிகளின் (Public School)



செயல்பாடுகளை நாங்கள் முடிவுக்குக் கொண்டுவருவோம்.

4. தனியார் பள்ளிகள் வசூலிக்கும் கல்விக் கட்டணங்களை அதிகமான வெளிப்படைத்தன்மையும், சமப்பகிர்வும், கட்டணம் செலுத்தும் சக்தியும் இருக்கும் விதத்தில் திருத்தியமைக்க கட்டண ஒழுங்குமுறை குழுக்களை மாநில அரசுகள் அமைப்பதை நாங்கள் ஊக்கமளிப்போம்.

5. கற்றல் வெளிப்பாடுகள் சிறப்பாக அமைவதற்கு தரமான கற்பித்தல் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு வகுப்பும், ஒவ்வொரு பாடமும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியரைக் கொண்டதாக இருப்பதை உறுதி செய்திட மாநிலங்களுடன் சேர்ந்து காங்கிரஸ் உழைத்திடும். ஒவ்வொரு வகுப்பிற்கும் தனி வகுப்பறை இருக்கவேண்டும்.

6. எண்கள், எழுத்துக்கள், அடிப்படை அறிவியல், அரசமைப்பு சட்ட விழுமியங்கள் ஆகியவற்றை வலியுறுத்தும் அடித்தளக்கல்வி அனைத்துக் குழந்தைகளுக்குமான முக்கியமான தேவையாகும். அடித்தளக் கற்றல் சிறப்பாக அமைவதற்கு ஏற்ற வகையில் அரசின் திட்டங்களை கூடுதலாக வழங்குவதற்குத் தேவையான நிதியை காங்கிரஸ் அதிகரித்து வழங்கும்.

7. அறிவியல் மனப்பாங்கினை வளர்ப்பதற்கு உதவிடும் விதத்தில் பள்ளி, கல்லூரிகளில் அறிவியல், தொழில்நுட்பம் பொறியியல், கணிதப் பாடங்களில் (STEM) கல்வி வழங்கப்படும்.

8. கற்பித்தல் அல்லாத நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துவதை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்.

9. காலியாக இருக்கும் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்காமல் நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

10. தொடக்கக் கல்விக்கு முன்பாக இரண்டு ஆண்டு கால முன்பருவக்கல்வி அளிக்கப்படும். முன்பருவக் கல்வியையும் தொடக்கக் கல்வியையும் ஒருங்கிணைத்து அனைத்துக் குழந்தைகளும் முன்பருவக்கல்வியைப் பெறுவது உறுதி செய்யப்படும்.

11. பள்ளிக் குழந்தைகளின் கற்றல் வெளிப்பாட்டில் மிகப்பெரிய இடைவெளி இருப்பதை வருடாந்திரக் கணக்கெடுப்புகள் காட்டுகின்றன. இத்தகைய குறைபாடுகளைக் களைவதற்கு உடனடியான நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். முழுமையான கற்றல் வெளிப்பாடுகள் கிடைப்பதை ஐந்து ஆண்டுகளுக்குள் உறுதிசெய்ய வேண்டும்.

12. கேந்திரிய வித்யாலயா, நவோதயா வித்யாலயா, கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகளின் எண்ணிக்கையை மாநில அரசுகளுடன் கலந்து பேசி காங்கிரஸ் அதிகரிக்கும்.

13. கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் தன்னாட்சியைநாங்கள் மீண்டும் கொண்டு வருவோம். உயர் கல்வி நிறுவனங்களில் கல்விச் சுதந்திரம் இருக்கும். பரிசோதித்து, புதுமைகள் படைத்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்படும். மாணவர்களின் பேச்சு சுதந்திரம், வெளிப்பாட்டு சுதந்திரம், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் அமைப்புகளுக்கான உரிமைகள் ஆகியவை பாதுகாக்கப்படும்

14. இடைநிற்றல் விகிதத்தைக் குறைப்பதற்காக, நாங்கள் பட்டியலின, பழங்குடி, பிற பிற்படுத்தப்பட்டோர், பொருளாதரத்தில் நலிவடைந்தோர், குற்றப்பரம்பரை நீக்கப்பட்ட பழங்குடிகள், சிறுபான்மையினர் போன்ற அனுகூலமற்ற பிரிவினருக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய உதவித் தொகையும், உயர்கல்விக்கான உதவித்தொகையும் கிடைப்பதை நாங்கள் உறுதி செய்வோம். உதவித்தொகையின் எண்ணிக்கையை அதிகரித்து அதற்கான நிதியையும் வழங்குவோம்.

15. மத்திய அரசின் பாடப்புத்தகங்கள் அனைத்தும் அறிவியல் மனப்பாங்கினை வளர்க்கும் விதத்தில் இருப்பதை நாங்கள் உறுதி செய்வோம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை, மற்ற சட்டப் பிரிவுகளில் காணப்படும் விழுமியங்களுடன் பாடப் புத்தகங்கள் ஒன்றி இருப்பதும் உறுதி செய்யப்படும். அரசியல் உள்நோக்கங்களால் உந்தப்படும் சர்ச்சைக்குரிய வகையில் பாடப் புத்தகங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது.



16. பிளஸ் 2 முடித்த மாணவர்கள் சேவைத்துறைகளிலும் (விருந்தோம்பல், சுற்றுலா, மின்னணு சந்தைப்படுத்துதல், துணை மருத்துவச் சேவைகள், துணை சட்டச் சேவைகள்), அடிப்படை உற்பத்தித் திறன்கள் தேவைப்படும் உற்பத்தித் தொழில்களிலும் வேலைவாய்ப்புகளைப் பெற உதவும் வகையிலான பலவகையான பரந்துபட்ட பட்டயப் படிப்புகளையும் பட்டப் படிப்புகளையும் நடத்துவதற்கான சமுதாயக் கல்லூரிகள் ஒவ்வொரு தாலுக்காவிலும் நிறுவப்படும்.

17. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட கல்விக்கடன் வழங்கும் திட்டத்தை உயிர்ப்பித்து 7.5 லட்சம் ரூபாய் வரையிலும் பிணையின்றி வங்கிகளின் மூலம் குறிப்பாக பட்டியலின, பழங்குடி, பிற பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கடன் வழங்கப்படும்.

18. மிகவும் பரவலாகக் காணப்படும் வேலையின்மையைக் கருத்தில் கொண்டு மார்ச் 15, 2024ஆம் ஆண்டு நிலவரப்படி திரும்பச் செலுத்தப்படாமல் இருக்கும் கல்விக்கடன் நிலுவைத் தொகையும், வட்டித் தொகையும் ஒருமுறை நிவாரணமாக அனைத்து மாணவர்களுக்கும் ரத்து செய்யப்படும். அரசாங்கம் இந்தத் தொகையைக் வங்கிகளுக்குக் கொடுத்துவிடும்.

19. பணிபுரியும் ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் கல்லூரி,



பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றங்களில் உறுதி செய்யப்படும்.

20. மத்தியப் பல்கலைக்கழகங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அனைத்தையும் நாங்கள் நிரப்புவோம்.

21. தேசிய தர நிர்ணய அமைப்புகள் வலுப்படுத்தப்படும். உயர்கல்வி நிறுவனங்கள் கடுமையான தரநிலை அளவீடுகளின் அடிப்படையில் தர நிர்ணயம் செய்யப்படும்.

22. இணையவழிக் கல்வியும், மின்னணு கற்றலும் முக்கியத்துவத்தை பெற்று வருகின்றன.எனவே, கற்றலில் சரிசமமான நிலையை உறுதிப்படுத்துவதற்கு ஒன்பதாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை அனைத்து மாணவர்களிடமும் கைப்பேசிகள் இருப்பதை நாங்கள் உறுதி செய்வோம். கல்லூரி வளாகங்களில் உச்சவரம்பின்றி இலவசமாக இணைய வசதி வழங்கப்படும். அவற்றை அணுகுவதும், தொடர்பு கிடைப்பதும் அதிகரிக்கப்படும்.

23. அனைத்துப் பயிற்சி நிறுவனங்களும், கல்வித் தொழில்நுட்ப நிறுவனங்களும் (EdTech Companies) கடுமையான தரநிலைகளைப் பின்பற்றுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

24. மத்திய, மாநில, தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மாணவர் சேர்க்கையில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் தரத்தை எட்ட வேண்டும். மத்திய அளவில் நடத்தப்பட்டு வரும் நுழைவுத் தேர்வுகள் தொடர்பான கொள்கையை நாங்கள் மறுபரிசீலனை செய்யப்படும். நீட், கியூட் போன்ற நுழைவுத் தேர்வுகளை ஏற்றுக் கொள்வதா அல்லது மாணவர் சேர்க்கைக்கான தரநிலையை எட்டுவதற்கு மாநில அளவில் தேர்வுகளைத் தாங்களே நடத்திக் கொள்வதா என்பது மாநில அரசுகளின் விருப்பத்திற்கு விடப்படும்.

25. இணைய வசதி கொண்ட சிறந்த தரம் உடைய பொது நுலகங்களை மாநில, மாவட்ட, தாலுக்கா தலைநகரங்களில் அமைப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம்.

# விளையாட்டு

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் தற்போதைய பிஜேபி/தேசிய ஜனநாயகக் கூட்டணியைப் போல எந்த ஒரு அரசாங்கமும் விளையாட்டை இந்த அளவுக்கு அரசியல் மயப்படுத்தியதில்லை, வெளிப்படையான அரசியல் காரணங்களுக்காக உலகக்கோப்பை விளையாட்டுகளை குறிப்பிட்ட சில இடங்களில் நடத்தியது தொடங்கி, விளையாட்டு அமைப்பில் இடம்பெற்றுள்ள அரசியல் சார்புடைய ஒரு நபர் இந்தியாவின் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களைத் துன்புறுத்தியதைக் கண்டு கொள்ளாதது வரையிலும் இந்திய விளையாட்டுகள் மிகவும் மோசமான காலகட்டத்தைக் கடந்து சென்று கொண்டு இருக்கின்றன.



விளையாட்டுத் துறைகளுக்கு தன்னாட்சி மீட்கப்பட்டால்தான் அவை சிறக்க முடியும் என்பதை காங்கிரஸ் நம்புகிறது. அரசியல் சார்புகள் களையப்பட்டு அரசாங்கம் வலிமைமிக்க நடுநிலையான ஆதரவு சக்தியாக இருந்தால்தான் விளையாட்டுத்துறையின் வளர்ச்சி சாத்தியப்படும்.

- ஒவ்வொரு விளையாட்டு அமைப்பிற்கும் குறிப்பிட்ட சில விதிமுறைகள், கொள்கைகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு, அத்தகைய தேர்தல்கள் அந்த அமைப்பின் சட்டத் திட்டங்களுக்கு இசைவானதாகவும், நீதிபதி லோதியா குழுவின் பரிந்துரைகளின்படியும் நடைபெறுவதை காங்கிரஸ் உறுதிசெய்யும். ஒவ்வொரு விளையாட்டு அமைப்பிலும் போதுமான அளவில் தற்போதைய வீர்களும், முன்னாள் வீரர்களும், பெண்களும் இருக்கவேண்டும்.
- விளையாட்டுக் கூட்டமைப்புகள்/ அமைப்புகள் / கழகங்களைப் பதிவு செய்வதற்கு தனி சட்ட திட்டங்களை காங்கிரஸ் ஏற்படுத்தும். ஒலிம்பிக் சாசனம் முழுமையாகப் பின்பற்றப் படுவதை இது உறுதி செய்யும். முழுமையான தன்னாட்சியையும் முழுமையான பொறுப்புக்கூறலையும் அளித்து பாகுபாடுகள், ஒருசார்பு, பாலியல் துன்புறுத்தல், மோசமாக நடத்துதல், வேண்டுமென்றே வெளியேற்றுதல் போன்றவற்றிற்கு எதிரான பாதுகாப்பை உறுப்பினர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இந்தச் சட்டம் அளிக்கும்.
- 21 வயதுக்குட்பட்ட திறமையான வளரும் விளையாட்டு வீரர்களுக்கு மாதம் ரூ. 10ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.
- ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு சமூக விளையாட்டு மையம் அமைவது உறுதி செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல விளையாட்டுகளுக்குப் பயிற்சியளிக்கும் குறைந்தபட்சம் ஒரு மையம் அமைக்கப்படும்.
- விளையாட்டு அறிவியல், விளையாட்டுப் பயிற்சிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக் காகவும் ஆராய்ச்சிகளை மேம்படுத்தவும்

தேசிய விளையாட்டு அறிவியல் கழகத்தை நாங்கள் அமைப்போம்.

- திறமையான இளைஞர்கள் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் ஏதுமின்றி விளையாட்டை ஒரு வாழ்க்கைத் துறையாக ஆக்கிக் கொள்ளும் வகையில் விளையாட்டு ஹீரோக்கள் வேலை உத்தரவாதத் திட்டம் உருவாக்கப்படும். தேசிய அளவிலும் வெளிநாடுகளிலும் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு வீரருக்கும் அவரது விளையாட்டுக் காலம் முடிந்ததும் தரமான நல்ல வேலை வழங்கப்படும்.
- சிறுமியர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், சாதகமற்ற சூழலில் வாழ்பவர்கள் ஆகியோரின் மத்தியில் விளையாட்டை வளர்த்தெடுப்பதற்குப் போதுமான நிதியை நாங்கள் ஒதுக்குவோம்.

# பெண்கள்



## மகாலட்சுமி

வருமானத்திலும் வாய்ப்பிலும் சமமின்மை என்பது இந்தியாவில் மிக மோசமான உண்மையாக இருந்து வருகிறது. உறுதியளிக்கப்பட்ட அடிப்படை வருவாயை ஒவ்வொரு இந்தியக் குடும்பமும் ஒவ்வொரு மாதமும் பெறுவதை உறுதி செய்வது அரசாங்கத்தின் தார்மீக அரசியல் பொறுப்பு ஆகும்.

- நாடு முழுவதும் உள்ள ஏழைக் குடும்பப் பெண்களுக்கு மகாலட்சுமி திட்டத்தின் கீழ் எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் ஆண்டு தோறும் ஒரு லட்சம் ரூபாய் வழங்கும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப் படும். வருமானம் மிகவும் குறைவாக இருக்கக் கூடிய ஏழைக்குடும்பங்கள் அடையாளம் கண்டறியப்படும்.
- வீட்டில் உள்ள மூத்த பெண் உறுப்பினரின் வங்கிக்கணக்கில் இந்தத் தொகை செலுத்தப்படும். பெண்கள் இல்லாவிட்டல் குடும்பத்தின் மூத்த உறுப்பினரின் வங்கிக்கணக்கில் தொகை செலுத்தபடும்.
- இந்தத் திட்டம் படிப்படியாக செயல் படுத்தப்பட்டு எத்தனைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன என்பதும், வறுமையிலிருந்து மீள்வதற்கு இந்தத் திட்டம் உதவுகிறதா என்பதும் ஒவ்வொரு ஆண்டும் மறுஆய்வுக்கு உட்படுத்தப் படும்.

1. பெண்களுக்கு பிஜேபி இழைத்திருக்கும் பெரும் துரோகத்தை அரசமைப்புச் சட்டத்தின் 106ஆவது திருத்தம் வெளிப்படுத்துகிறது. மக்களவையிலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு 2029ஆம் ஆண்டில் தான் செயல்பாட்டிற்கு வரும் வகையில் தீய நோக்கம் கொண்ட பிரிவுகள் இந்தத்

# பெண்களுக்கு அதிகாரமளித்தல்

பெண்கள் வரலாற்று ரீதியாக பாகுபாடுகளுக்கு ஆளாகி சாதகமற்ற சூழல்களில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இத்தகைய பாகுபாடுகளைக் களையவும் பெண்களின் உரிமைகளை உயர்த்திப் பிடிக்கவும் காங்கிரஸ் உறுதிபூண்டுள்ளது.



திருத்தத்தில். இருக்கின்றன. இத்தகைய பிரிவுகளை காங்கிரஸ் உடனடியாக நீக்கும். பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு 2025ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் கொண்டுவரப்படும். இதனைத் தொடர்ந்து 2029ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலும் பெண்களுக்கான இடஒதுக்கீடு அமலுக்கு வரும்.

2. 2025ஆம் ஆண்டு முதல் மத்திய அரசுப்பணிகளில் சரிபாதிப் பணிகள் (50%) பெண்களுக்கு வழங்கப்படுவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

3. நீதிபதிகள், அரசுச் செயலாளர்கள், உயர்நிலை காவல் துறை அதிகாரிகள், சட்ட அதிகாரிகள், பட்டியலிப்பட்ட கம்பெனிகளின் இயக்குநர்கள் போன்ற உயர் பதவிகளில் பெண்கள் அமர்த்தப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

4. பாலின அடிப்படையில் பாகுபாடு, பாலின அடிப்படையிலான முன்முடிவுகள் தொடர்பான அனைத்து சட்டங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். புண்படுத்தும் வகையிலான சட்டப் பிரிவுகள் காங்கிரஸ் ஆட்சியின் முதலாவது ஆண்டிலேயே நீக்கப்படும்.

5. பெண்களுக்கான ஊதியத்தில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கும் வகையில், ஒரு வேலைக்கு ஒரே விதமான ஊதியம் என்ற கொள்கை அமல்படுத்தப்படும்.

6. ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவுத்திட்ட சமையல்காரர்கள் போன்ற முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு மத்திய அரசின் ஊதியப் பங்களிப்பு இரட்டிப்பாக்கப்படும்.

7. பெண்களுக்கு வழங்கப்படும் நிறுவனக் கடன்கள் கணிசமாக அதிகரிக்கப்படும். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள், வங்கி சாராத நிதி நிறுவனங்கள், நுண்நிதி நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் கடன் தொகை பெருமளவு உயர்த்தி வழங்கப்படும்.

8. உழைக்கும் பெண்களின் பங்கேற்பு மிகவும் குறைவான அளவில் 25 சதவீதமாக இருக்கிறது. சம ஊதியம், பாதுகாப்பான பணியிடங்கள், குழந்தைப் பராமரிப்பு வசதிகள், பாலியல் சீண்டல், வன்முறை இல்லாத சூழல் ஆகியவற்றை உருவாக்கிக் கொடுத்து உழைக்கும் பெண்களின்

பங்களிப்பை அதிகப்படுத்தும் பிரம்மாண்டமான பணியில் நாங்கள் ஈடுபட இருக்கிறோம்.

9. மகளிர் இயக்குநர்களின் கீழ் நன்றாக உருவாகிச் செயல்பட்டு வந்த, பாரதிய மகிளா வங்கி பாஜக ஆட்சியில் சிதைக்கப்பட்டுவிட்டது. இந்த வங்கி மீட்டுருவாக்கம் செய்யப்படும்.

10. திருமணம், வாரிசுரிமை, மரபுரிமை, தத்தெடுத்தல், பாதுகாவலர் போன்ற விஷயங்களில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான உரிமைகள் இருக்க வேண்டும். இவை தொடர்பான சட்டங்களை மறு ஆய்வு செய்து ஆண் - பெண் சமத்துத்துவத்தை நாங்கள் உறுதி செய்வோம்.

11. பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கான பணிபுரியும் இடங்களில் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதற்கு எதிரான (தடுப்பு, தவிர்ப்பு, குறை தீர்த்தல்) சட்டம் 2013, பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம், 2005 போன்ற சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்படும்.

12. புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் இரவில் தங்குவதற்கு போதுமான இடங்களை உருவாக்குதல், பெண்களுக்கான போதுமான தூய்மையான பாதுகாப்பான பொதுக் கழிப்பறைகள் ஆகியவற்றை நகரங்களிலும் பெருநகரங்களிலும் உருவக்கித் தருவதற்காகவும், பொது இடங்கள் பள்ளிகள் கல்லூரிகளில் அணையாடைகள் வழங்கும் கருவிகளை நிர்மாணிப்பதற்கும் மாநில அரசுகளுக்கு போதுமான நிதி வழங்கப்படும்.

13. மாநில அரசுகளுடன் இணைந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 'சாவித்திரிபாய் பூலே' பெயரில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி குறைந்தபட்சம் ஒன்று வீதம் அமைக்கப்படும். நாட்டில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் இருமடங்காக்கப்படும்.

14. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 'அதிகார் மைத்திரி' நியமிக்கப்படுவார். இவர் பெண்களுக்கு துணை சட்ட உதவிகளை வழங்கி தங்களின் சட்ட உரிமைகளைப் அவர்கள் பாதுகாத்துக்கொள்வதற்கு உதவி செய்வார்.

# விவசாயிகள்



விவசாயிகளின் போராட்டம் விவசாயத் துறையில் நிலவி வரும் கடுமையான நெருக்கடி தொடர்பான எச்சரிக்கை மணியை ஒலிக்கிறது.

பிஜேபி/தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் எதிர்வினை மிகவும் இரக்கமற்றதாக, மிருகத்தனமானதாக இருந்தது. விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான லாபம் தரக்கூடிய விலை கிடைக்கவில்லை. அவர்களின் விளைபொருள்களை விற்பதற்கான போதுமான சந்தை வாய்ப்புகளும் அமையவில்லை. ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் அவர்களை பலவீனப்படுத்திவிட்டன. விவசாயப் பணியாளர்களின் துயரமோ இன்னும்

மோசமானது. அவர்களுக்கு தொடர்ச்சியாக வேலை கிடைப்பதில்லை. நான்கு ஆண்டுகளாக ஊதியம் ஒரே அளவில் தேங்கி நிற்கிறது.

### விவசாயம்

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் துயர் மிகுந்த அழைப்பிற்கு காங்கிரஸ் கட்சி மட்டுமே செவி கொடுத்தது. அவர்களின் கவலைகளைப் போக்குவதற்கும் விவசாயத்தை விரும்பத்தக்க வாழ்வாதரமாக ஆக்குவதற்குமாக இயன்ற அனைத்தையும் செய்திட வேண்டும் என்று நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம்.

- எம்.எஸ்.சுவாமிநாதன் ஆணையம் பரிந்துரைத்தபடி ஒவ்வொரு ஆண்டும் அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு (MSP) சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்கப்படும்.
- விவசாயச் செலவுகள், விளைபொருள் களின் விலைகள் தொடர்பான ஆணையம் (CACP) சட்டபூர்வமான அமைப்பாக மாற்றப்படும்.
- கொள்முதல் மையங்களில் விளை பொருள்களை விற்பனை செய்ய வரும் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை வேளாண் விளைபொருள் அங்காடி மையங்கள் (APMC) விவசாயி களின் வங்கிக் கணக்கில் மின்னணு முறையில் நேரடியாகச் செலுத்தும் .
- வேளாண் நிதிக்கான நிரந்தர ஆணையத்தை நாங்கள் அமைப்போம். அளிக்கப்பட வேண்டிய விவசாயக் கடன்களின் அளவு, விவசாயக் கடன்களின் மீது இரக்கம் காட்ட வேண்டிய அவசியம் ஆகியவை பற்றி இந்த ஆணையம் அவ்வப்போது அறிக்கையளிக்கும்.
- பயிர்க்காப்பீடு விவசாயத்திற்கும் விவசாயிகளுக்குமானதாக மாற்றப்படும். காப்பீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு ஏற்ப விவசாயிகளிடமிருந்து காப்பீட்டுத் தொகை வசூலிக்கப்படும். காப்பீடு தொடர்பானஅனைத்துக்கோரிக்கைகளும் 30 நாள்களில் தீர்த்து வைக்கப்படும்,
- விவசாயிகள் அமைப்புகளுடன் கலந்தா லோசித்து விவசாய விளைபொருள்களை விற்பனை செய்வதற்கான மூன்று வழிகள் உருவாக்கப்படும். அவை:

அ) தற்போதுள்ள விவசாய விளைபொருள் சந்தைக்குழு சட்டத்தின்படியான (APMC Act) ஒழுங்குமுறை விற்பனைச் சந்தை .

ஆ) விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், வேளாண் உற்பத்திப் பொருள் அமைப்புகள் (FPO), தனிப்பட்ட முன்னணி விவசாயிகள் அடங்கிய தன்னாட்சியுடன் கூடிய அமைப்பான இ-சந்தைகள்

இ) வேளான் விளைபொருள்களை விவசாயச் சந்தைகளிலோ, விற்பவர்-வாங்குவர் ஒப்பந்தத்தை மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யக்கூடிய அவர்களுக்கு விருப்பமான வேறெந்த ஒரு இடத்திலோ விற்பனை செய்துகொள்ளலாம்.

- பெரிய கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் சில்லறை விற்பனைச் சந்தைகளை நாங்கள் அமைப்போம். இங்கு விவசாயிகள் தங்களின் விளை பொருள்களைநேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்துகொள்ளலாம்.
- விவசாய விளைபொருள்களுக்கான சிறப்பான இறக்குமதி - ஏற்றுமதிக் கொள்கைகள் உருவாக்கப்படும். இதில் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப் பதற்கு முதன்மையான முக்கியத்துவம் தரப்படும்.
- விவசாயம் செய்யப்படும் ஒவ்வொரு பகுதியிலும் சிறந்த விவசாய அறிவு, சிறப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் விவசாய விரிவாக்க மையங்களை புத்துயிர் கொடுத்து மீண்டும் நாங்கள் அமைப்போம். வேளாண் அறிவியல் மையங்களின் எண்ணிக்கையை நாங்கள் அதிகரிப்போம்.

- சூரியசக்தி மின்சார ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்காக குழாய்க் கிணறுகளுடன் சூரிய மின்சக்தித் தகடுகளை இணைத்து நிறுவும் திட்டம் துவக்கப்படும்.
- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு தோட்டக்கலை, மீன்வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் பெருமுயற்சியை காங்கிரஸ் செயல்படுத்தும்.
- பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு உற்பத்தி ஆகியவற்றில் உற்பத்தியாகும் பொருள்களின் மதிப்பை ஐந்து ஆண்டுகளில் நாங்கள் இரட்டிப்பாக்குவோம்.
- நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேளாண் கல்லூரியும், ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் நிறுவப்படுவதை மாநில அரசுகளுடன் இணைந்து நாங்கள் உறுதி செய்வோம்.
- விவசாய ஆராய்ச்சிகளுக்கு நிதியளிப்பதை ஐந்து ஆண்டுகளில் நாங்கள் இரட்டிப்பாக்குவோம்.

# மீன்பிடிப்பும் மீனவ சமுதாயமும்



கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு டீசலுக்கு மானியம் தரும் முறையை நாங்கள் மீண்டும் கொண்டு வருவோம்.

கடலில் காணமல் போகும் மீனவர்களை விரைந்து தேடுவதற்கு உதவிகள் வழங்கப்படும். காணமல் போன மீனவர் இறந்துவிட்டதாகக் கருதப்பட்டால் மூன்று மாதங்களில் இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

கடலுக்குள் செல்லும் மீன்பிடிப் படகுகளுக்கு காப்பீடு வசதி வழங்குமாறு காப்பீட்டு நிறுவனங்கள் அறிவுறுத்தப்படும்.

மீனவர்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு கிசான் கடன் அட்டையைப் போன்ற கடன் அட்டைகள் மீனவர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும்,

சாதிவாரி கணக்கெடுப்பில் மீனவர் சமூகங்கள் பற்றிய கணக்கெடுப்பு செய்யப்பட்டு மத்திய அரசால் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

உள்நாட்டு மீன்பிடிப்பும், மீன் வளர்ப்புத் தொழிலும் 'விவசாயம்' என்று அங்கீகரிக்கப்படும்.

கடல் பொருள்கள் ஏற்றுமதிக்கான தாவர சுகாதாரத் தரத்தை மேம்படுத்தி, அத்தகைய தரநிலையை எட்டும் பொருள்களின் ஏற்றுமதியை நாங்கள் மேம்படுத்துவோம்.

கடற்கரை ஓரங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் வளர்த்தெடுக்கப்பட்டு மீனவ சமுதாயத்தின் பயன்பாட்டிற்கு அளிக்கப்படும்.

மீன சமுதாயத்தினருக்கான வங்கிகளை நாங்கள் உருவாக்குவோம்.

மீனவர்கள் மோதல், கைது, படகுகள் பறிமுதல், உயிர் இழப்புகள் ஆகியவற்றைத் தடுப்பதற்கு அண்டை நாடுகளுடன் புதிய வழிமுறைகளை காங்கிரஸ் உருவாக்கிக் கடைப்பிடிக்கும். மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரம் மேம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# பணியாளர்கள்



1. தொழிலகச் சட்டங்களிலும், தொழிலாளர் சட்டங்களிலும் நாங்கள் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம். முழுமையான வேலைவாய்ப்பு, மிக அதிக உற்பத்தி ஆதாயங்கள் ஆகிய இரட்டை இலக்கினை எட்டுவதற்காக தொழிலாளர்கள் மூலதனம் ஆகியவற்றிற்கிடையே சமநிலையை மீட்டெடுப்பதற்காக இந்தச் சீர்திருத்தங்கள் செய்யப்படும்.

2. பணிபுரியும் இடங்களில் பாலின சமத்துவமின்மை, பொருளாதார வாய்ப்புகளை எளிதில் பெறுவது ஆகிய பிரச்சினைகளை நாங்கள் அணுகுவோம்.

3. பெண்களுக்கு குறைவான ஊதியம் தரப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஒரு வேலைக்கு ஒரே மாதிரி ஊதியம் என்ற கோட்பாட்டை நாங்கள் உறுதி செய்வோம்.

4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேலைகளுக்கான ஒரு நாள் ஊதியம் ரூ.400 ஆக அதிகரித்து வழங்கப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் கீழ் வேலை பெறும் பணியாளர்களும் அதற்காகத் தரப்பட்டிருக்கும் நிதியும் வகுப்பறைகள், நூலகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற பொதுச் சொத்துக்களை உருவாக்கும் பணியிலும் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

5. நகர்ப்புற உள்கட்டமைப்புகளை புதுப்பித்து மறுநிர்மாணம் செய்வதில் நகர்ப்புற ஏழைகளுக்கு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை நாங்கள் உருவாக்கி வேலைக்கு உத்தரவாதம் அளிப்போம்.

6. சேவைத்துறைகளில் தற்காலிகப்பணிகளில் இருக்கும் GIG பணியாளர்களிப் பதுகாக்கவும், அமிப்புசாரா தொழிலாளர் களைப் பாதுகாக்கவும் அவர்களின் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தவும் நாங்கள் சட்டங்கள் இயற்றுவோம்.

7. வீட்டு வேலை செய்வோர், புலம் பெயர்ந்த பணியாளர்களின் வேலைகளை ஒழுங்குபடுத்தி அடிப்படையான சட்ட உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதற்கான சட்டங்களை நாங்கள் முன்மொழிவோம்.

8. அனைத்து மாநிலங்களிலும் ரேசன் அட்டை வைத்திருப்பவர்களின் விவரங்கள் உடனடியாகப் புதுப்பிக்கப்பட்டு, ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களும், புலம்பெயர் தொழிலாளர்களும் ரேஷன் பொருள்களைத் தொடர்ச்சியாகப் பெறுவது உறுதி செய்யப்படும்.

9. புதுப்பிக்கப்பட்ட மக்கள்தொகை எண்ணிக்கையின் (மக்கள்தொகை கணக்கு எடுக்கப்படுவதற்கு முன்பாகவே) அடிப்படையில் பொது விநியோகத் திட்டம் மக்களைச் சென்றடைவதை நாங்கள் விரிவாக்குவோம். பொது விநியோகத் திட்டத்தில் பருப்புகளும், சமையல் எண்ணெயும் வழங்கப்படும்.

10. பொது விநியோகத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்,பாட்டுத் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013இன் ஆணையை நிறைவேற்றும் வகையில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.


11. கர்நாடகாவிலும், ராஜஸ்தானிலும் செய்யப்படுவதைப்போல மானிய விலையில் உணவு வழங்கும் 'இந்திரா உணவகங்களை' திறப்பது தொடர்பாக மாநில அரசுகளுடன் இணைந்து நாங்கள் உழைத்திடுவோம்.

12. 2500க்கு அதிகமாக மக்கள் வசிக்கும் கிராமங்களில் இரண்டாவது ஆஷா பணியாளர் கூடுதலாக நியமிக்கப்படுவார்.

13. அங்கன்வாடிப் பணியாளர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி கூடுதலாக 14 லட்சம் வேலைகள் உருவாக்கப்படும்.

14. தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதியமாக ஒரு நாளைக்கு ரூ.400 கிடைப்பதற்கு காங்கிரஸ் உத்தரவாதமளிக்கிறது.

# அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாத்தல்




குடியாட்சியைப் பாதுகாத்தல். அச்சத்தைப் போக்குதல், சுதந்திரத்தை மீட்டளித்தல்

இந்தியாவின் சுதந்திரம் வெறும் கூடாக குறைக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றம் உட்பட ஒவ்வொரு அமைப்பும் அதன் சுதந்திரத்தை இழந்துவிட்டதாகப் பார்க்கப்படுகிறது. இவை யாவும் அரசுக்கு அடிபணிந்து செயல்படுவதாகக் கருதப்படுகிறது. ஒரு நபரின் விருப்பம் மட்டுமே தேசத்தில்

மேலோங்கி நிற்கிறது என்பது பொதுவாக இருக்கிறது. ஜனநாயகக் அமைப்புகளின் மீதான அறியப்படும் செய்தியாக மக்களின் நம்பிக்கை மீட்டெடுக்கப்படும்.

1. அச்சத்திலிருந்து உங்களுக்கு விடுதலை அளிப்போம் என்று நாங்கள் உறுதிகூறுகிறோம்.

2. பேச்சுரிமை, கருத்துரிமையை நாங்கள் மீட்டளிப்போம் என்று உறுதியளிக்கிறோம். ஊடகங்களின் முழு சுதந்திரமும் மீட்கப்படும்.

3. அவதூறு குற்றத்தை கிரிமினல் குற்றப் பட்டியலிலிருந்து நீக்குவோம் என்று உறுதி கூறுகிறோம். அவதூறுகளுக்கு சிவில் நஷ்டஈடு விரைவாகக் கிடைக்கும்படி செய்யப்படும்.

4. தன்னிச்சையாகவும், பாரபட்சத்துடனும் இணையத்தை துண்டிப்பதை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

5. தொலைத் தொடர்புச் சட்டம் 2023 மறுஆய்வுக்கு உட்படுத்தப்படும். பேச்சு சுதந்திரத்தையும், கருத்து சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் அதிலுள்ள பிரிவுகள் நீக்கப்படும். தனிப்பட்ட உரிமைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் மறு ஆய்வு செய்யப்படும்.

6. தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பொருத்தமான சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

7. அமைதியாகக் கூடும் உரிமையையும், ஒன்று சேர்ந்து சங்கங்களை உருவாக்குவதையும் அனுமதிக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம்

8. உணவு, உடை, காதல், திருமனம், இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் பயணித்தல் போன்ற தனிப்பட்ட விருப்பங்களில் தலையிட மாட்டோம் என்று உறுதி கூறுகிறோம். தனிப்பட்ட உரிமைகளில் காரணமின்றி தலையிட வகை செய்யும் அனைத்து சட்டங்களும், விதிமுறைகளும் நீக்கப்படும்.

9. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் வருடத்தில் 100 நாள்களுக்குக் கூடும் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். முன்பு நடைமுறையில் இருந்து வந்த நாடாளுமன்ற மரபுகள் மீண்டும் நேரிய விதத்தில் கடைபிடிக்கப்படும், எதிர்க் கட்சிகள் தெரிவிக்கும் ஆலோசனைகளைப் பற்றி விவாதிப்பதற்காக வாரத்தில் ஒரு நாள் இரு அவைகளிலும் நேரம் ஒதுக்கப்படும். அவைத் தலைவர்கள் எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்பில்லாதவர் களாக நடுநிலையானவர்களாக 'சபாநாயகர் ஒருபோதும் பேசுவதில்லை' என்ற மரபை கடைப்பிடிப்பவராக இருப்பார்கள் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

10. 'ஒரு தேசம் ஒரு தேர்தல்' என்ற கருத்தினை நாங்கள் நிராகரிக்கிறோம். அரசமைப்புச் சட்டத்தின்படியும், நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளின்படியும் மக்களவைக்கும், மாநில சட்ட மன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டிய சமயங்களில் நடத்தப்படும்.

11. தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர்களின் நம்பிக்கை மீட்டெடுக்கப்படும். வாக்களிக்கும் ஈவிஎம் கருவியின் செயல்திறனையும், வாக்குச்சீட்டின் வெளிப்படைத் தன்மையையும் ஒருங்கிணைக்கும் விதத்தில் தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவோம். வாக்களிப்பது ஈவிஎம் கருவியின் மூலம் செய்யப்படும். வாக்களிப்பு சரிபார்ப்புக்கருவி (VVPAT) உருவாக்கும் ஒப்புகைச் சீட்டை வாக்காளர் பெற்று அதனை விவிபாட் கருவியில் போட முடியும். மின்னணு வாக்குப்பதிவுக் கருவியின் பதிவுடன் ஒப்புகைச் சீட்டையும் ஒப்பிட்டுப் பார்த்து வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

12. இந்திய தேர்தல் ஆணையம், மத்திய தகவல் ஆணையம், மனித உரிமை ஆணையம், கணக்குத் தணிக்கைத் தலைமை அதிகாரி, எஸ்.சி, எஸ்.டி ஆணையம், இதர பிற்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் போன்ற அரசமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட அனைத்து அமைப்புகளின் சுயாட்சியும் வலுப்படுத்தப்படும் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

13. கட்சி மாறுபவரின் பதவி தானாகவே பறிபோகும் வகையில் அரசமைப்புச் சட்டத்தின் 10ஆவது அட்டவணையில் திருத்தம் கொண்டுவரப்படும்.

14. திட்டக்கமிஷன் மீட்டெடுக்கப்படும். அதன் செயல்பாடுகளும் பொறுப்புகளும் வரையறுக்கப்படும். நவ சங்கல்ப் பொருளாதாரக் கொள்கையின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடுத்தர, நீண்ட கால முன்னோக்குத் திட்டங்களை வடிவமைப்பது திட்டக் கமிஷனின் பொறுப்பாக இருக்கும்.

15. காவல்துறை, விசாரணை, புலனாய்வு முகமைகள் சட்டத்தின்படி செயல்படுவது உறுதி செய்யப்படும். நாடாளுமன்றம், சட்டமன்றங்களின் மேற்பார்வையில் இந்த அமைப்புகள் கொண்டுவரப்படும்.

16. சட்டங்களை ஆயுதமாகப் பயன்படுத்துவது, தன்னிச்சையாக சோதனை போடுவது, கைப்பற்றுவது, முடக்குவது, பாரபட்சமான வகையில் கைது செய்வது, குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு கொடுமைப்படுத்துவது, நீண்டகாலம் சிறையில் வைத்திருப்பது, சிறை மரணங்கள், புல்டோசர் நீதி ஆகியவற்றிற்கு முடிவு கட்டுவோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

17. ‘ஜாமீன் என்பது விதி, சிறை என்பது விதிவிலக்கு’ என்ற கோட்பாட்டை அனைத்து குற்றவியல் சட்டங்களையும் இணைவித்து சட்டம் இயற்றுவோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். சிறைகளை சீர்திருத்த மையங்களாக மாற்றும் வகையில் ஒருங்கிணைந்த சிறை சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

## பாதிப்புகளைச் சரிசெய்தல்

கடந்த 10 ஆண்டுகளில் பிஜேபி/ தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி தனது மிருகத்தனமான பெரும் பான்மையைப் பயன்படுத்தி மிகவும் அதிகமான தீங்குகளைச் செய்திருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் நோக்கங்களையும் மீறும் வகையில் சட்டங்களை நாடாளுமன்றத்தில் இயற்றி யுள்ளது. சட்டங்களை இயற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளும் மீறப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் முறையான விவாதங்கள், பரிசீலனைகள் ஏதுமில்லாமல் மக்களுக்கு எதிரான சட்டங்களை பிஜேபி / தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கொண்டுவந்துள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள், குற்றவியல், நீதி, சுற்றுச்சூழல் மற்றும் வனம், மின்னணுதரவுப் பாதுகாப்பு ஆகியவற்றோடு தொடர்புடைய பல சட்டங்கள் இப்படி இயற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தும் முற்றிலுமாக மறு ஆய்வு செய்யப்பட்டு மாற்றியமைக்கப்படும்.

தேர்தல்பத்திர முறைகேடுகள் குறித்து முழுமையான விசாரணையை நாங்கள் நடத்துவோம், பொறுப்பற்ற வகையில் விற்கப்பட்டிருக்கும் பொதுச் சொத்துகள், பி,எம். கேர் நிதி முறைகேடு, உயரிய இடங்களில் தொடர்ச்சியான உளவுத் தவறுகள், முக்கியமான ராணுவக் கொள்முதல்களில் ஊழல் ஆகியவை பற்றியும் விசாரிக்கப்படும்.

# ஊடகம்

கடந்த 10 ஆண்டுகளில், ஊடகங்களின் கணிசமான பகுதி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது, அல்லது அவற்றின் சுதந்திரத்தைச் சரணடையச் செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசியல் சாசனத்தின் அடிப்படையில் தாங்கள் அனுபவித்து வந்த சுதந்திரத்தை மீண்டும் பெற, ஊடகங்களுக்கு காங்கிரஸ் உதவும்.




- ஊடகங்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கு, சுயகட்டுப்பாடே சிறந்த வழிமுறை என்பதில் காங்கிரஸ் எப்போதும் நம்பிக்கை வைத்துள்ளது. சுயகட்டுப்பாடு முறையை வலுப்படுத்தி, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அரசின் தலையீட்டிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், இந்திய பத்திரிகை கவுன்சில் சட்டம், 1978இல் காங்கிரஸ் கட்சி திருத்தம் மேற்கொள்ளும்.
- பொய்ச்செய்தி மற்றும் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண, இந்தியப் பத்திரிகை கவுன்சிலுக்கு அதிகாரமளிக்கும் விதமாக, இந்தியப் பத்திரிகை கவுன்சில் சட்டம், 1978இல் காங்கிரஸ் கட்சி திருத்தம் மேற்கொள்ளும்.
- அரசின் நிர்பந்தங்களிலிருந்து ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை இயற்றுவதன் மூலம், ஊடகச் சுதந்திரத்திற்கு காங்கிரஸ் பாதுகாப்பு அளிக்கும். ஊடகவியலாளர்களை அரசு கண்காணித்தல், அவர்களது சாதனங்களைப் பறிமுதல் செய்தல், அவர்களது ஆதாரங்களை வெளிப்படுத்துவதற்கான அதிகாரங்களைக் குறைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும்.
- ஊடகங்களில் நிலவும் ஏகபோகத் தன்மை, ஒரே நபர் அல்லது நிறுவனம், ஊடகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு உரிமை வகிப்பது, பெருந்தொழில் நிறுவனங்கள் ஊடகங்களில் ஆதிக்கம் செலுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை காங்கிரஸ் நிறைவேற்றும். இதுபோன்ற ஏகபோகம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பிரச்சினைகளை, இந்தியப் போட்டிகள் ஆணையத்திற்கு காங்கிரஸ் அனுப்பி வைக்கும்.
- ஊடக நிறுவனங்கள் எவ்வளவு பெரிய நிறுவனமாக இருந்தாலும், அவர்களது உரிமையாளர் விவரங்கள், பங்குதாரர் நிறுவனங்கள், வருவாய் ஆதாரங்கள் போன்றவற்றை, அவர்களது இணைய தளத்தில் வெளியிடுமாறு அறிவுறுத்தப்படும்.
- இணையதள சுதந்திரத்தைப் பாதுகாத்து, தன்னிச்சையான போக்கு மற்றும் இணையதளம் அடிக்கடி மூடப்படுவது இவற்றைத் தடுப்பதற்கான சட்டம் ஒன்றை காங்கிரஸ் நிறைவேற்றும்.
- பல்வேறு புதிய சட்டங்கள் (உ-ம். ஒலிபரப்பு சேவைகள்(திருத்த) மசோதா, 2023; டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், 2023; பத்திரிகை மற்றும் பருவ இதழ்கள் பதிவுச் சட்டம், 2023 உள்ளிட்டவை) அளவற்ற தணிக்கை அதிகாரத்தை அரசுக்கு வழங்குவதாக உள்ளன. முதலில் குறிப்பிடப்பட்டுள்ள மசோதா திரும்பப் பெறப்படும். எஞ்சிய இரண்டு சட்டங்கள் தொடர்பான வழிமுறைகள் திருத்தப்படும் அல்லது பின்வாயில் தணிக்கையை ஒழிப்பதற்கான அதிகாரம் நீக்கப்படும்.
- திரைப்படங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான அளவுகோளுக் கேற்ப, மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரியம், தர வாரியான சான்றிதழ் வழங்க ஏதுவாக, திரைப்பட ஒளிப்பதிவு சட்டம், 1952இல் காங்கிரஸ் திருத்தம் மேற்கொள்ளும்.

# நீதித்துறை



தவறான நிர்வாகம், சட்டங்களை ஆயுதமாக்குதல், புலனாய்வு அமைப்பு களைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் பாஜக அரசு கடந்த 10 ஆண்டுகளில் நிர்வாக அதிகாரங் களைத் தவறாகப் பயன்படுத்தியதன் விளைவாக, ஜனநாயக விரோத செயல்களுக்கும் சர்வாதிகாரத்திற்கும் எதிராக, நீதிமன்றங்களையே மக்கள் தங்களது கடைசிப் புகலிடமாகக் கருதி நாடிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. சுதந்திரமான நீதித்துறையால் மட்டுமே இந்தியாவின் அரசியல் சாசனத்தை நிலைநாட்ட முடியும்.


- *நீதித்துறையின் சுதந்திரம், தரம், நீதிபதிகளின் சுதந்திரம் மற்றும் தரத்தில் பிரதிபலிக்கிறது. நீதித்துறையின் சுதந் திரத்தை, காங்கிரஸ் கட்சி உறுதியாக நிலைநாட்டும். உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதி களுடன் கலந்தாலோசித்து, தேசிய நீதித் துறை ஆணையம் (National Judicial Commission (NJC) ஒன்றை காங்கிரஸ் ஏற்படுத்தும். இந்தஆணையத்தில் இடம்பெறுவோரின் பெயர், உச்சநீதி மன்றத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும். தேசிய நீதித்துறை ஆணையம் தான், உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்து நியமிக்கும்.*
- *உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதி மன்றத்தில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும், மூன்றாண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படும்.*
- *உச்சநீதிமன்றத்தில் இரண்டு பிரிவுகளை அமைக்கும் விதமாக, அரசியல் சாசனத்தில் காங்கிரஸ் திருத்தம் கொண்டு வரும்: அரசியல் சாசன நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம். ஏழு மிக மூத்த நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன நீதிமன்றம், அரசியல் சாசன பொருள் விளக்கம் மற்றும் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த அல்லது தேசிய முக்கியத்துவம் தொடர் பான வழக்குகளை விசாரிக்கும். மேல்முறை யீட்டு நீதிமன்றம், தலா மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வாக அமர்ந்து, உயர்நீதிமன்றங்கள் மற்றும் தேசிய நடுவர் மன்றங்களின் (தீர்ப்பாயங்கள்) தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் இறுதி நீதிமன்றமாக இருக்கும்.*
- *நீதித்துறையின் அமைப்பு ரீதியான கட்டமைப்பையும் தொழில்நுட்ப கட்டமைப்புகளையும் ஏற்படுத்தவும், நவீனமயமாக்கல் மற்றும் கட்டமைப்பு பராமரிப்புக்குத் தேவைப்படும் நிதியை நாங்கள் ஒதுக்குவோம்.*
- *உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகளாக மேலும் அதிக பெண்கள் மற்றும் எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவு களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவர்.*
- *நீதித்துறையின் உயர்மட்டத்தில் பணியாற்றும் நீதிபதிகளின் தவறான நடத்தை குறித்த புகார்களை விசாரிக்க, உச்சநீதிமன்றங்களில், உயர்நீதிமன்றங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்ட நீதித்துறை புகார் ஆணையம் ஒன்றையும் காங்கிரஸ் அமைக்கும்.*

# ஊழல் எதிர்ப்பு

கடந்த 10 ஆண்டுகளில் பாஜக அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள், ஊழலுக்கு புகலிடம் அமைப்பதாகவே அமைந்ததை நாம் அறிவோம். பண மதிப்பிழப்பு, ரபேல் ஒப்பந்தம், பெகாசஸ் உளவு சாதனம், மற்றும் தேர்தல் பத்திரங்கள் திட்டம் போன்றவை, இதற்கு உதாரணங்கள் ஆகும். போலியான இந்த ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து விசாரணை நடத்துவதுடன், இந்த நடவடிக்கைகளின் வாயிலாக சட்டவிரோதமாக ஆதாயம் அடைந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும்.

இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டவர்கள், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நாட்டை விட்டு வெளியேற, பாஜக அரசு உதவி செய்ததுடன், இதுபோன்ற ஊழல்வாதிகளை நாட்டிற்குக் கொண்டுவரவும் முடியவில்லை என்று கருதப்படுகிறது. அவர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்ட சூழல்கள் குறித்து விசாரணை நடத்தி, அனைத்து ஊழல்வாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

பாஜக, பெரிய சலவை இயந்திரமாக மாறியுள்ளது. வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, பாஜக–வில் இணைந்தவர்கள், சட்டத்திலிருந்து தப்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீது மீண்டும் விசாரணை நடத்தப்படும்.



SBI

भारतीय स्टेट बैंक STATE BANK OF INDIA

(भारतीय स्टेट बैंक अधिनियम, 1955 के तहत गठित/Constituted under the State Bank of India Act, 1955)
कॉरपोरेट केन्द्र, स्टेट बैंक भवन, मादाम कामा रोड, नरीमन पॉइंट, मुंबई - 400021
Corporate Centre, State Bank Bhavan, Madame Cama Road, Nariman Point, Mumbai - 400021

इलेक्टोरल बॉण्ड/ELECTORAL BOND
(प्रोमेसरी नोट के स्वरूप में / IN THE FORM OF PROMISSORY NOTE)

जारी करने की तिथि / DATE OF ISSUE: 10 APR 2018

जारी करने की तिथि से 15 दिनों तक वैध / VALID UPTO 15 DAYS FROM THE DATE OF ISSUE

लिखत की राशि / VALUE OF THE INSTRUMENT : ₹ 1,000/- ( रुपये एक हजार मात्र / Rupees One Thousand only )

प्राप्त की गई राशि के लिए, बैंक एतदद्वारा पात्र आदाता को जो इस लिखत का धारक है, मांग करने पर पात्र राजनीतिक पार्टी के नामित बैंक खाते में यह मूल लिखत जमा करने पर इस लिखत की राशि ₹ 1,000/- (रुपये एक हजार मात्र) का भुगतान करने का वचन देता है जो कि केन्द्र सरकार की गजट अधिसूचना क्रमांक 20 दिनांक 2 जनवरी 2018 द्वारा अधिसूचित इलेक्टोरल बॉण्ड स्कीम, 2018 के अनुसार है ।

उक्त राशि का भुगतान करने के उपरांत बैंक की देयता पूर्ण रूप से समाप्त हो जाएगी ।

For value received, the Bank hereby promises to pay on demand to the eligible Payee which is holding this instrument, upon surrender of the original instrument in the Designated Account of the eligible Political Party with the Bank, the sum representing the value of this instrument of ₹ 1,000/- (Rupees One Thousand only) in accordance with the Scheme called 'The Electoral Bond Scheme, 2018', notified by the Central Government vide Gazette Notification No. 20 dated the 2nd January, 2018.

# கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம்



கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் போன்றவை மக்களின் அடையாளமாகத் திகழ்கின்றன. பாஜக அரசு, கலாச்சாரத்தை அரசியல் மற்றும் சித்தாந்த கண் கொண்டே பார்த்ததுடன், உண்மை யிலேயே அவற்றை பின்பற்று வோரையும், அத்தகைய நடைமுறை களையும், கலாச்சார அமைப்பு களையும் புறக்கணித்ததுடன், தரம்தாழ்த்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது. இந்தியாவின் கலை, கலாச்சார பன்முகத்தன்மையைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ள காங்கிரஸ், இவை அனைத்தும் சுதந்திரமான மற்றும் படைப்பாற்றல் கொண்ட சூழலுடன் இயங்குவதையும் உறுதி செய்யும்.

1. *கலைத்துறையின் சுதந்திரத்திற்கு காங்கிரஸ் உத்தரவாதம் அளிக்கும். தணிக்கை முறையை நாங்கள் எதிர்ப்போம். கண்காணிப்புக் குழுக்கள் என்ற பெயரில் தணிக்கை செய்ய அல்லது கலைஞர்களை அச்சுறுத்தும் முயற்சிகள் மீது, சட்டத்தின் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

2. *இந்தியாவின் வாழ்க்கைப் பாரம்பரியம், குறிப்பாக நமது தனித்துவமிக்க உள்நாட்டுக் கலாச்சாரங்கள் செழித்தோங்குவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை வழங்குவதற்கும், அவை நிலைத்து நிற்பதில் கவனம் செலுத்துவதற்கும் காங்கிரஸ் உத்தரவாதம் அளிக்கும்.*

3. *கைவினைஞர்களுக்குப் பொருளாதார அதிகாரமளித்து, கலைநயம் சார்ந்த தொழில்களை நாங்கள் ஊக்குவிப்போம்.*

4. *நிதி தன்னாட்சி உட்பட, தேசிய கலாச்சார அமைப்புகளின் தன்னாட்சி அதிகாரத்தை காங்கிரஸ் உறுதி செய்யும். இத்தகைய அமைப்புகள், அந்தந்தத் துறையில் பிரசித்திபெற்ற கலைஞர்கள் மற்றும் வல்லுநர்களால் நிர்வகிக்கப்படும்.*

5. *பள்ளிகளில், கல்லூரிகளில், கலைப் பாடத்தை ஊக்குவிப்பதோடு, கலையை மட்டும் பிரத்யேகமாக பயிற்றுவிக்கும் நிறுவனங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிப்போம்.*

6. *இந்தியாவிலிருந்து திருடிச் செல்லப்பட்ட கலைப்பொருள்களை மீண்டும் நாட்டிற்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை நாங்கள் தீவிரப்படுத்துவதுடன், தனியார் முயற்சிகளுக்கும் ஆதரவளிப்போம்.*

7. *அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள், நூலகங்கள், ஆவணக் காப்பகங்களை அமைப்பதற்கான அரசு மற்றும் தனியார் முயற்சிகளுக்கு காங்கிரஸ் ஆதரவளிக்கும். உள்ளூர் கலைகள், கைவினைஞர்கள், நாட்டுப்புறக் கலாச்சாரம், சமுதாயங்களின்*

களஞ்சியமாகத் திகழும் மாவட்ட அளவிலான சிறிய நிறுவனங்களும் இதில் அடங்கும். டிஜிட்டல் ஆவணக் காப்பகங்களை அமைக்கும் முயற்சிகளுக்கும் நாங்கள் ஆதரவளிப்போம்.

8. நூலகங்களின் தேசியக் கட்டமைப்பை உருவாக்க, மாநில அரசுகளுடன் இணைந்து பாடுபடுவோம். நடமாடும் மற்றும் சமுதாய நூலகங்களுக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

9. நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருட்களுக்கான தேசிய இயக்கத்திற்குப் புத்துயிரூட்டுவதை நாங்கள் உறுதி செய்வோம். இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்திற்கு, அதிக நிதியும், மனித வளமும் வழங்கப்படும்.

10. தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றவும், இந்தியர்களின் மென்திறனை வெளிநாடுகளில் பரப்ப ஏதுவாக, பாரம்பரிய மற்றும் இந்தியக் கலாச்சாரத்தின் தற்கால பிரதிபலிப்புகளை, இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்க நாங்கள் நிதியுதவி வழங்குவவோம்.

11. பதிப்புரிமைச் சட்டம், 1957-ஐ நாங்கள் மறுஆய்வு செய்து வலுப்படுத்துவோம்.

# பொருளாதாரம்



அரசியல், சமூகநீதியைப் போன்றே, பொருளாதார நீதியும் முக்கியமானது ஆகும். வலுவான பொருளாதாரக் கொள்கைகள், வளரும் நாடான இந்தியாவை, முதலில் ஒரு நடுத்தர - பொருளாதார நாடாகவும், பின்னர் வளர்ச்சியடைந்த நாடு என்ற நிலையை எட்டுவதையும் உறுதி செய்யும்.

காங்கிரசின் பொருளாதாரக் கொள்கை, பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. 1991இல், தாராளமயமாக்கல் யுகத்தில் இறங்கிய காங்கிரஸ், நாட்டை வெளிப்படையான, சுதந்திரமான மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையுடன் கூடிய போட்டிமிக்க பொருளாதார நாடாக மாற்ற வழிநடத்தியது. இதன் காரணமாக, சொத்து உருவாக்கம், புதிய தொழில்கள் மற்றும் தொழில் முனைவோர், பெருமளவிலான நடுத்தர வர்க்கத்தினர், லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள், கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் முக்கியமான புதுமைகள், ஏற்றுமதி என, ஏராளமான பலன்களை நாடு அனுபவித்துள்ளது. பல லட்சக்கணக்கான மக்கள், வறுமையிலிருந்து மீட்கப்பட்டனர். எனவே, வலிமையான மற்றும் சாத்தியமான பொதுத்துறையின் ஒத்துழைப்புடன், தனியார் துறை சார்ந்த பொருளாதார வளர்ச்சிக்கான, வெளிப்படையான பொருளாதாரம் மீதான எங்களது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

## மறு சீரமைப்புக்கான தருணம்

33 ஆண்டுகளுக்குப் பிறகு, பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைப்பதற்கான தருணம் வந்துள்ளது. புதிய லட்சியத்திற்கான பொருளாதாரக் கொள்கை நமக்குத் தேவை. வேலைவாய்ப்புகள் தான், புதிய லட்சியத்திற்கான பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சம். வேலைவாய்ப்புகளை உருவாக்க, இந்தியாவை உற்பத்திப் பொருளாதாரமாக மாற்றுவது அவசியம்.

நாம், நமக்காகவும், உலகிற்காகவும் பொருட்களை உற்பத்தி செய்வதோடு, சேவை செய்ய வேண்டும். உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளராக இந்தியா உருவெடுப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பு மற்றும் பாஜக-வின் வேலையிழப்பு அதிகரிப்பு பாரம்பரியத்தை நாங்கள் புறந்தள்ளுவோம். பணவீக்கம்; மக்களின் கணிசமான தரப்பினரிடையே காணப்படும் உச்சகட்ட வறுமை; பட்டினி; பெண்கள், குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடு; மற்றும் அதிகரித்துவரும் சமச்சீரற்ற வருமானம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வு காண்போம்.

வேலை, சொத்து, நலன் ஆகியவையே, நமது பொருளாதாரக் கொள்கையின் மூன்று இலக்குகள் ஆகும்.

## வேலை

வேலை என்பதன் பொருள், அபரிமிதமான வேலைவாய்ப்புகள், சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழில் தொடங்குவதற்கு போதுமான வாய்ப்புகளை உருவாக்குவதாகும்.

1. ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை நாங்கள் உருவாக்குவோம். வேலைவாய்ப்பு உருவாக்குவதில் தனியார்துறை சிறந்து விளங்குகிறது. குறிப்பாக, குறு,சிறு, நடுத்தரத் தொழில் துறை தான் அதிகளவில் குறிப்பாக, நடுத்தரக் கல்வி மற்றும் தொழில்திறன் உடையவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.
2. தனியார் துறைக்கு நாங்கள் ஒத்துழைப்பு அளிப்பதுடன், பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் குறுந்தொழில் என அனைத்து வகையான தொழில் துறையினர், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பொருட்கள் உற்பத்தி மற்றும் சேவைகளுக்கும் உறுதுணையாக இருப்போம்.
3. தற்போதைய அவநம்பிக்கை, அச்ச உணர்வுச் சூழலை அகற்றி, தனியார் தொழில்துறையினர், கட்டுப்பாட்டு அதிகாரிகள், வரிவிதிப்பு அதிகாரிகள், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் மரியாதை உணர்வுடன் அரசாங்கம் பணியாற்றுவதற்கான ஆரோக்கியமான சூழலியலை நாங்கள் உருவாக்குவோம்.
4. புதுமைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளை நாங்கள் பாதுகாப்பதுடன், நிதித் தேவைகளை அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்கி, சுதந்திரமான உற்பத்தி, இந்தியாவில் அல்லது உலகின் எந்தப் பகுதியிலும் விற்பனை செய்வதற்கான சுதந்திரத்தை நாங்கள் உறுதி செய்வோம்.
5. சுதந்திரமான வர்த்தகம் மற்றும் விதிமுறை சார்ந்த சர்வதேச வாணிபம் மற்றும் வர்த்தகத்திற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.
6. இருதரப்பு மற்றும் பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை நாங்கள் ஊக்குவித்து, அதில் பங்கேற்போம்.
7. ஒழுங்குமுறை மேற்பார்வை என்பது, தெளிவாக பயன்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, நேர்மையான மற்றும் பாரபட்சமற்ற முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
8. அனைவருக்கும் சமமான களத்தை நாங்கள் உறுதிசெய்வோம்.
9. ஏகபோக ஆதிக்கம், பெருந்தொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட துறையில் ஆதிக்கம் செலுத்துவது, நட்பு ரீதியான முதலாளித்துவம் ஆகியவற்றை நாங்கள் எதிர்க்கிறோம்.
10. எந்தவொரு நிறுவனமோ அல்லது நபரோ, நிதி அல்லது பொருட்களைத் திரட்டுவதிலோ அல்லது தொழில்

வாய்ப்பு அல்லது சலுகை பெறுவதில் மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளாமல், இவை அனைத்தும் அனைத்து தொழில் முனைவோருக்கும் கிடைப்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

11. எங்களது கொள்கை முன்னுரிமை என்பது, பெருமளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், வர்த்தக நிவனங்களுக்குச் சாதகமானதாக இருக்கும்.

12. முழுமையான வேலைவாய்ப்பு என்பதே எங்களது குறிக்கோள் என்பதால், பெருமளவிலான தொழிலாளர்கள் ஆதாயத்துடன் பணியமர்த்தப்படுவதை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

13. முழுமையான வேலைவாய்ப்பு மற்றும் அதிக உற்பத்தி ஆதாயம் என்ற இரட்டை குறிக்கோளை அடைய, தொழிலாளர் மற்றும் முதலீடு இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கான, தொழில்துறை மற்றும் தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தங்களை நாங்கள் கொண்டு வருவோம். பாஜக அரசாங்கம் நிறைவேற்றிய தொழிலாளர் சட்டங்களை மறுஆய்வு செய்து, அதில் திருத்தங்களை மேற்கொள்வோம்.

14. பணியிடங்களில் காணப்படும் பாலினப் பாகுபாடு மற்றும் பாலின சமத்துவமின்மை மற்றும் பொருளாதார வாய்ப்புகளை அணுகுவதில் உள்ள பிரச்சினைகளுக்கும், நாங்கள் தீர்வு காண்போம்.

15. சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் வங்கிக்கடன் கிடைப்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

16. வங்கிகளால் விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்களை விரிவாக மறு ஆய்வு செய்து, வாடிக்கையாளர்கள் சுரண்டப்படுவதை நிறுத்தி, வங்கி சேவைகளுக்கான கட்டணங்களை முறைப்படுத்தும் பணியையும் காங்கிரஸ் மேற்கொள்ளும்.

17. மறுகட்டுமானம், நகர்ப்புறக் கட்டமைப்புகளைப் புதுப்பிக்கும் பணியில், நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்கும் நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தை நாங்கள் தொடங்குவோம்.

18. பாரம்பரியம் அல்லாத தொழில்களில் ஈடுபடும் (GIG) தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, தெளிவாக குறிப்பிடுவதற்கான சட்டத்தை நாங்கள் கொண்டுவருவோம்.

19. வீட்டு வேலைப் பணியாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை முறைப்படுத்து வதற்கான சட்டங்களை நாங்கள் பரிந்துரைப்பதோடு, அவர்களது சட்ட ரீதியான அடிப்படை உரிமைகளையும் உறுதி செய்வோம்.

20. வேலைவாய்ப்பு, ஊதியம் மட்டுமன்றி, முதலீடுகள் மற்றும் லாபங்கள் தொடர்பான வரிக் கொள்கைகளையும் நாங்கள் மறுசீரமைப்போம்.

21. கொள்கைகளில் தகுந்த மாற்றம் செய்வதன் வாயிலாக, சொத்துகளும் வருவாயும் சமச்சீரற்ற முறையில் அதிகரித்துவரும் பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு காண்போம்.

## சொத்து

எந்தவொரு வர்த்தகமாக இருந்தாலும், சொத்து மற்றும் சொத்து உருவாக்கம் ஆகியவை, முக்கியக் குறிக்கோளாக இருக்கும். பொருட்கள் உற்பத்தி மற்றும் சேவைகளை பெருமளவிலும், அதிக மதிப்பிலும் மேற்கொள்வதற்கு உதவும் விதமாக, தொழில் மற்றும் வர்த்தகக் கொள்கைகள், ஒழுங்குமுறைகள் வடிவமைக்கப்படும். உற்பத்தி முக்கியம் என்றாலும், உற்பத்தித் திறனும் சம அளவிற்கு

முக்கியம் வாய்ந்தது ஆகும். அதிகளவிலான உற்பத்தி அல்லது உயர் மதிப்புமிக்க சட்ட ரீதியான அல்லது நிர்வாக ரீதியான எந்தவொரு தடையும் அகற்றப்படும். இந்தியாவிற்குள்ளும், இறக்குமதி வாயிலாகவும், நிதியுதவி, மூலப்பொருட்கள், தொழில்நுட்பம், அறிவுசார் சொத்துரிமை மற்றும் பிற வளங்களைப் பெறுவதற்கு உதவுவோம். இந்தியாவிற்குள்ளும் அல்லது ஏற்றுமதி வாயிலாகவும் பொருட்களை விற்பனை செய்ய, வர்த்தக நிறுவனங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. சுதந்திரமான மற்றும் நியாயமான வர்த்தகத்திற்குத் தடையாக உள்ள அனைத்து சட்டங்களும் விதிமுறைகளும் மறுஆய்வு செய்யப்பட்டு, மாற்றியமைக்கப்படும்.

1990-91இல், இந்தியாவின் GDP (மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம்), நிலையான வகையில், ஏறத்தாழ ரூ.25 லட்சம் கோடியாக இருந்தது. 13 ஆண்டுகளில், முதலில் காங்கிரஸ் ஆட்சியிலும், அதன்பின் கூட்டணி ஆட்சி காலங்களிலும், GDP இரட்டிப்பாகி, 2003-04இல் ரூ.50லட்சம் கோடி மதிப்பை எட்டியது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) ஆட்சி நடைபெற்ற 10 ஆண்டுகளில், பொருளாதாரம் மீண்டும் இரட்டிப்பு வளர்ச்சியை எட்டியதுடன், ஜிடிபி-யும் 2013-14இல் 100 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. வழிவழியாகப் பெற வேண்டிய 100 லட்சம் கோடி ரூபாய் பொருளாதார வாய்ப்பை, பாஜக அரசாங்கம் வீணடித்துவிட்டது. காங்கிரஸ் கூட்டணி ஆட்சி தொடர்ந்திருந்தால், பொருளாதாரம் மீண்டும் இரட்டிப்பு வளர்ச்சியை அடைந்து, 2023-24இல் 200 லட்சம் கோடி ரூபாயை எட்டியிருக்கும். அந்தோ பரிதாபமாக, பாஜகவின் முறையற்ற நிர்வாகத்தால், 2023-24 இறுதியில், அடைய முடியாத இலக்கிற்கும் குறைவாக, 173 லட்சம் கோடி ரூபாயை மட்டுமே GDP எட்டியது.

அபரிமிதமான வளர்ச்சியையும் சொத்துகளையும் உருவாக்க காங்கிரஸ் உறுதி பூண்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் GDP-யை இரட்டிப்பாக்க, நாங்கள் இலக்கு நிர்ணயிப்போம்.

**நலன்**

அனைவரின் நலன் தான், அனைத்துப் பணிகள் மற்றும் சொத்து உருவாக்கத்தின் குறிக்கோளாக இருக்கும். பாஜக-வின் வளைந்து கொடுக்கும் கொள்கைகள் காரணமாக, இந்திய மக்கள், பொருளாதார அடிப்படையில் பிரிக்கப்பட்டனர். மிகச்சிறிய அளவிலான பெரும் பணக்காரர்கள், கணிசமான அளவிலுள்ள நடுத்தர வர்க்கத்தினர், வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள போதிலும், நடுத்தர நிலையை எட்டாத பெருமளவிலான மக்கள், மற்றும் ஏறத்தாழ 22 கோடி மக்கள் ஏழைகளாகவே உள்ளனர். காங்கிரஸ் ஆட்சி காலத்தில், அனைத்து அரசு நிதி ஆதாரங்களிலும், ஏழைகள் நலனுக்குத் தான் முன்னுரிமை தரப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் முயற்சிகள், அடுத்த பத்தாண்டுகளில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள 22 கோடி மக்களை வறுமைக் கோட்டிலிருந்து மீட்பதை உறுதி செய்யும்; இதன்படி அவர்கள், கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு, மின் இணைப்பு வசதி போன்ற பலன்களை அனுபவிக்க முடியும், அத்துடன், அனைத்திற்கும் மேலாக, வேலைவாய்ப்பு/வேலைக்கான வாய்ப்பு; மற்றும் வலுவான மற்றும் மேம்பட்ட பொருளாதார நிலையில் உள்ளவர்களுடன் போட்டியிடும் அளவிற்கு தற்சார்பு அடைவார்கள்.

மக்கள், மேம்பட்ட பொருளாதார நிலையை எட்டும்போது, மேம்பட்ட கட்டமைப்பு வசதி மற்றும் மேம்பட்ட சரக்கு மற்றும் சேவைகளே அவர்களது தேவையாக இருக்கும். இவை தவிர, ‘எதிர்காலத்திற்கு-தயாராகவுள்ள’ இந்தியப் பொருளாதாரம் மற்றும் இந்திய தொழிலாளர் படையை நாம் பெற முடியும். எதிர்காலச் சவால்கள் என்பது, உலகப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் மற்றும் இயந்திரங்கள் மூலம் கற்றல் போன்ற அதிநவீன தொழில்நுட்பம், மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். நமது வருங்கால

எரிசக்தி, பசுமை எரிசக்தியாக இருக்கும். நமது பசுமை எரிசக்தி மாற்றத்திற்குத் தேவையான பெரும் மூலதனத்தை, நாம் திரட்டியாக வேண்டும்.

புதிய லட்சியத்திற்கான பொருளாதாரக் கொள்கை, நியாயமான, சரியான, சமவாய்ப்புள்ள பொருளாதாரத்தை உருவாக்கி, அனைத்துத்தரப்பு மக்களுக்கும் வளம் சேர்ப்பதாக அமையும். 1991இல் நாம் செய்ததைப்போல, தேச நிர்மாணத்தில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி, காங்கிரஸ் புதிய தொடக்கத்தை ஏற்படுத்தும். பொருளாதாரத்தின் இருபெரும் சவால்களாக உள்ள வேலைவாய்ப்பு, பணவீக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், பொருளாதார வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை, மறு-நிர்ணயம் செய்தும், மறு-முன்னுரிமை அளித்தும் செயல்படுவதற்கான தருணம் நெருங்கி வந்துள்ளது.

இந்தத் தேர்தல் அறிக்கையின் பல்வேறு பிரிவுகளில், குறிப்பிட்ட சில வாக்குறுதிகளை நாங்கள் அளித்துள்ளோம். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் மூலம், நியாயமான, சரியான, சமவாய்ப்புள்ள பொருளாதாரம் என்ற தலையாய இலக்கை எட்டி, இந்தியாவை பணக்கார நாடாக மாற்ற நம்மால் முடியும், இது மாறி வரும் உலகைப் பின்பற்ற ஏதுவாக மீண்டுவர உதவும்.

# வேலைவாய்ப்பின்மை – வேலை தேடுவோரை எதிர்கொள்ளுதல்




பரவலாகக் காணப்படும் வேலை வாய்ப்பின்மை தான் தற்போதைய பெரும் சவாலாக உள்ளது. எங்கு நோக்கினும் வேலை வேண்டும் என்ற குரல் தான் எதிரொலிக்கிறது. வேலைவாய்ப்பின்மை வீதம் 10 சதவீதம் (15-29 வயதுடையவர்கள்) முதல் 42.3 சதவீதம் (25 வயதிற்கும் குறைவான பட்டதாரிகள்) முதல் 9.8 சதவீதம் (30-34 வயதுடைய பட்டதாரிகளுக்கு) வரையிலும் உள்ளது. ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்ற பொய்யான வாக்குறுதி அளித்து ஏமாற்றிய பாஜக மீது யாருக்கும் எவ்வித நம்பிக்கையும் கிடையாது. இந்தக் கொடிய பிரச்சினையில், பாஜக அரசாங்கங்களின் பொறுப்பு என்பது, தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்புகளைக் கைவிடுதல், புள்ளிவிவரங்களைத் திரித்துக் கூறுதல், பிரச்சினை ஏதுமில்லை என்று பாசாங்கு செய்தல் என்பதாகவே உள்ளது. நாங்கள் பிரச்சினையை உணர்ந்திருப்பதோடு, உறுதியான நடவடிக்கைகள் வாயிலாக லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று உறுதியளிக்கிறோம்.

- மத்திய அரசின் பல்வேறு மட்டங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சுமார் 30 லட்சம் காலிப்பணியிடங்கள், மத்திய கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவோம்.
- ஒவ்வொரு துறையிலும், கல்வி நிறுவனம் மற்றும் அரசு அமைப்புகளிலும் காலியாக உள்ள பணியிடங்கள் மற்றும் அவற்றை நிரப்புவதற்கான காலநிர்ணயம் அடங்கிய

வேலைவாய்ப்பு நாட்காட்டியை வெளியிடுவோம்.

- அக்னிபாத் திட்டத்தைக் கைவிட்டு, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட முழு எண்ணிக்கையை எட்டும் விதமாக, வழக்கமான ஆட்சேர்ப்பை மேற்கொள்ளுமாறு ஆயுதப் படைகளை (இராணுவம், கடற்படை, விமானப் படை, கடலோரக் காவல் படை) அறிவுறுத்துவோம்.
- 2500க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்து கிராமங்களிலும், இரண்டாவது ஆஷா பணியாளரை நியமிப்போம்.
- அங்கன்வாடி பணியாளர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி, கூடுதலாக 14 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- வழக்கமான,தரமானவேலைவாய்ப்புக்கும் கூடுதலாக பணியமர்த்தும்பெருந்தொழில் நிறுவனங்கள் வரிச் சலுகைகள் பெறுவதற்கான, புதிய வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை (ELI) திட்டம் உருவாக்கப்படும்.
- ஜிடிபி-யில் சுரங்கத்துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கிலும், கனிமவளம் மிகுந்த மாநிலங்களில், திறன் பயிற்சி பெறாத மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கென 1.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அரிய கனிமங்கள், முக்கியமான தனிமங்கள் இருப்பைக் கண்டறிந்து, அவற்றை வெட்டியெடுக்க நீடித்த சுரங்கத்திட்டம் தொடங்கப்படும். இந்தத் திட்டம், கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர் பாதுகாப்புத் தர விதிகளுக்கேற்ப செயல்படுத்தப்படும்.
- மறு கட்டுமானம் மற்றும் நகர்ப்புறக் கட்டமைப்புகளைப் புதுப்பிப்பதில், நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்கும், நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்குவோம்.
- கிராமப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் வாயிலாக, நீர்நிலை புனரமைப்புத் திட்டம் மற்றும் தரிசுநில மறுசீரமைப்புத் திட்டங்களைத் தொடங்குவதன் மூலம், குறைவான கல்வித்தகுதி உடையவர்கள், குறைவான திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- மாநில அரசுகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களை உள்ளடக்கி, 18-29 வயதுடைய இளைஞர்களுக்கு, குறுகிய கால, நீண்டகால திறன் பயிற்சி வழங்குவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும், குறைந்தது ஒரு தன்னாட்சி பெற்ற லாப நோக்கமற்ற சங்கம் (Society) தோற்றுவிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்களில் திறன் பயிற்சி அளிப்பதற்கு, சிஎஸ்ஆர் நிதியைப் பயன்படுத்த பெருந்தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.
- பொதுப் பயன்பாடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரியசக்தி மின் தொகுப்புகளை அமைத்து, அவற்றைப் பராமரிப்பதற்காகவும், பஞ்சாயத்துகள் அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் பஞ்சாயத்துகள் ஊக்குவிக்கப்படும்.
- பணியிடங்கள் பெண் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பானவையாகவும், சிறு குழந்தைகளைக் கவனிக்கும் வசதி கொண்டவையாகவும் ஆக்குவதற்கேற்ப சட்டங்கள் திருத்தப்படும். இதுபோன்ற பணியிடங்களுக்குப் பயண வசதி ஏற்படுத்தப்படும்.

# வரிவிதிப்பு மற்றும் வரி சீர்திருத்தங்கள்




வரி சீர்திருத்தங்கள், நிர்வாகத்திற்கு அவசியமானவை. "வெறிபிடித்த வரிவிதிப்புக்கு" கடந்த பத்தாண்டு கால பாஜக ஆட்சி, சிறந்த உதாரணம் ஆகும். பிற்போக்கான மறைமுக வரிகள் மூலம், சாமான்ய நபர் மற்றும் ஏழைகள் செலுத்தும் வரிகளின் பங்களிப்பு கணிசமாக அதிகரித்துள்ள அதே வேளையில், பெருந்தொழிலதிபர்கள் செலுத்தும் வங்கிகளின் பங்களிப்பு குறைந்திருப்பது - மக்களுக்கு உகந்த மற்றும் முன்னேற்றகரமான வரிவிதிப்புக் கொள்கைக்கு முற்றிலும் எதிராக உள்ளது. பண மதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டி வாயிலாக, வரிக்கட்டமைப்பு விரிவடைந்திருப்பதாகக் கூறப்படும் போதிலும், கடந்த பத்தாண்டுகளில், ஜிடிபி-யில் இந்தியாவின் ஒட்டுமொத்த வரி பங்களிப்பு அதிகரிக்காதது, செலவினம் அதிகரிக்கத்தான் வழிவகுத்துள்ளது. காங்கிரஸ் கட்சி, இந்தியாவின் ஒட்டுமொத்த வரிவிதிப்பு முறையையும் முழுமையாகச் சீர்திருத்தி, மக்களுக்கு உகந்ததாகவும், திறமைமிக்கதாக மாற்றுவதுடன், தனியார் சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

1. நேரடி வரிகள் நிர்வாகத்தை வெளிப்படைத்தன்மை, நியாயமான, தெளிவான மற்றும் பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ள, நேரடி வரிவிதிப்பு விதிமுறைகளை காங்கிரஸ் இயற்றும்.
2. காங்கிரஸ் தனது ஆட்சி காலத்தில், நிலையான தனிநபர் வருமான வரி விகிதத்தைப் பின்பற்றும். இது, மாதச் சம்பளம் பெறுவோர், வரி உயர்வுகளால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதோடு, தங்களது பணத்தை நடுத்தர காலம் முதல் நீண்டகால முதலீட்டிற்கு திட்டமிட தெளிவான பாதையைக் காட்டும்.
3. புதிய குறு, சிறு நிறுவனங்கள் மற்றும் புதுமையான புத்தாக்கத் தொழில்களுக்கான முதலீட்டைத் தடுக்கும் "தேவதை வரி" மற்றும் பிற அனைத்து சுரண்டல் வரி முறைகளையும் நாங்கள் நீக்குவோம்.
4. தனிநபர்கள் மற்றும் பங்குதாரர்களால் நிர்வகிக்கப்படும் குறு,சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீதான வரிச் சுமையை, காங்கிரஸ் குறைக்கும்.
5. மொத்த வரி வருவாயில் மத்திய செஸ் வரி மற்றும் கூடுதல் வரிகளை 5 சதவீதமாக குறைக்க சட்டம் கொண்டுவந்து, வரி வருவாயில் மாநிலங்களுக்கு உரிய பங்கைத் தர மறுக்கும் மோடி அரசின் போலியான 'செஸ்' ராஜ்ஜியத்தை நாங்கள் முடிவுக்குக் கொண்டுவருவோம்.

6. ஜிஎஸ்டி 2.0 மூலம், பாஜக அரசாங்கம் இயற்றிய ஜிஎஸ்டி சட்டங்களை காங்கிரஸ் மாற்றியமைக்கும். ஜிஎஸ்டி என்பது, ஏழைகள் மீது சுமையை ஏற்படுத்தாத, ஒற்றை, மிதமான விகிதம் (சில விதிவிலக்கு களுடன்) என்ற உலகளவில் ஏற்றுக் கொள்ளத்தக்க கொள்கை அடிப்படையில், புதிய ஜிஎஸ்டி முறை அமையும்.

7. வேளாண் இடுபொருட்கள் மீது ஜிஎஸ்டி வரி விதிக்கப்படாது.

8. ஜிஎஸ்டி கவுன்சில் மாற்றியமைக்கப்படும். இது, ஜிஎஸ்டி தொடர்பான கொள்கை மற்றும் அனைத்து அம்சங்கள் மீதும் முடிவெடுக்கும் இறுதிக்கட்ட அமைப்பாக இருக்கும்.

9. ஜிஎஸ்டி சட்டங்களின் நிர்வாகம், மத்திய–மாநில அரசுகளுக்கிடையே கிடைமட்டமாகப் பிரிக்கப்படும். குறிப்பிட்ட தொகைக்கும் குறைவாக, சிறிய அளவில் ஜிஎஸ்டி செலுத்துவோர், மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படுவார்கள்.

10. ஜிஎஸ்டி வருவாயின் ஒரு பகுதி, பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளுக்கும் பிரித்து வழங்கப்படும்.

11. ஆன்லைன் வர்த்தகத்தால் கடுமையான போட்டியைச் சந்திக்கும் வியாபாரிகள் மற்றும் சிறிய அளவிலான சில்லரை வணிகர்களுக்கு, கணிசமான வரிச்சலுகை வழங்கப்படும்.

12. வருமான வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் (ITAT), சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு நடுவர்மன்றம் (GSTAT), சுங்கவரி மேல்முறையீட்டு நடுவர்மன்றம் (CESTAT) ஆகியவை அரசின் எவ்வித தலையீடும் இல்லாத, தன்னாட்சி பெற்ற நீதிமன்றங்களாக இருக்கும்.

# தொழில்துறை

வளர்ச்சியடைந்த பொருளாதார நாடாக உருவெடுக்கவும், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு நல்ல தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இந்தியா, நுகர்வோர் பொருளாதாரம் என்ற நிலையிலிருந்து, உற்பத்தியாளர் பொருளாதார நிலைக்கு மாறுவது மிகவும் அவசியம். உள்நாட்டுத் தேவைகளையும், உலகின் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய பொருட்கள் உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய சக்திவாய்ந்த உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்க வேண்டும். இதனை அடைய, பொருளாதாரம் தொழில்துறை சார்ந்த அம்சங்களையும் தாண்டி, சமூக நல்லிணக்கம் மிக அத்தியாவசியமான அம்சமாக, மூதலீடுகளை ஈர்க்கக்கூடிய மற்றும்திறன் பயிற்சிபெற்ற தொழிலாளர்களைக்கொண்ட நாடாகவும் இருக்க வேண்டும். இதன் அடிப்படையில், முந்தைய 25 ஆண்டுகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில், இந்தியாவின் உற்பத்தித் துறையின் பங்களிப்பு, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அதிகமாக இருந்தது. ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, கடந்த 10 ஆண்டுகளில் (2014–24) உற்பத்தித் துறையின் பங்களிப்பு 14 சதவீதத்திலேயே நின்றுவிட்டது.



- அடுத்த ஐந்தாண்டுகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில், உற்பத்தித் துறையின் பங்களிப்பை 14 சதவீதத் திலிருந்து 20 சதவீதமாக உயர்த்துவதன் மூலம், இந்தியாவை உற்பத்தி மைய மாக மாற்றகாங்கிரஸ் உறுதிபூண்டுள்ளது.
- ஆரோக்கியமான, அச்ச உணர்வற்ற மற்றும் தொழில் துறையினருக்கு நம்பிக்கையான சூழலை மீண்டும் ஏற்படுத்துவது, உடனடி நோக்கமாக இருக்கவேண்டும். தொழில் தொடங்கு வதற்கான உரிமங்கள் மற்றும கட்டுப்பாடுகளை, 1991இல் காங்கிரஸ் அரசு ரத்து செய்த அதேவேளையில், இதற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்ட சுதந்திரமான கட்டுப்பாட்டுமுறை, வெளிப்படையான, மறைமுகமான கட்டுப்பாட்டு முறைகளை சீர்குலைத்து விட்டது. தொழில்துறையினர், வியாபாரிகள் மற்றும் வர்த்தகத் துறையினருக்கு மீண்டும் சுதந்திரம் அளிக்கும் விதமாக, தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை, நாங்கள் விரிவாக மறுஆய்வு செய்து, அவை ரத்து செய்யப்படும் அல்லது திருத்தப்படும்.
- எஃகு, உலோகங்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளி, சிமெண்ட், வாகனத் தொழில், மின்னணுச் சாதனங்கள், மருந்துப் பொருட்கள், பொறியியல் சாதனங்கள், பெட்ரோலியப் பொருட்கள், இரசாயணப் பொருட்கள் மற்றும் அரிய தாதுக்கள் மற்றும் முக்கியமான தனிமங்களை வெட்டியெடுப்பதில், இந்தியா முன்னிலை பெறுவதற்கு, காங்கிரஸ் பாடுபடும்.
- ரிசர்வ் வங்கியின் அறிக்கைகளின்படி, ஏறத்தாழ 60 சதவீத மத்திய அரசுத் திட்டங்கள் தடைப்பட்டுள்ளன அல்லது தாமதமாகியிருப்பதுடன், செலவினமும் ஏறத்தாழ 5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு காங்கிரஸ் கட்சி விரைவாக தீர்வு கண்டு, தடைபட்டுள்ள திட்டங்களை, தனியார் துறை உதவியுடன் மீண்டும் செயல்படுத்து வதற்கான வழிமுறைகளை ஆராயும்.
- உற்பத்தித் துறையில், இந்தியாவை உலகின் 5 முன்னணி உற்பத்தியாளர் நாடுகளில் ஒன்றாக மாற்றுவதன்மூலம், ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய குறிப்பிட்ட துறை களுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை (PLI) திட்டத்தை காங்கிரஸ் மாற்றியமைக்கும்.
- வழக்கமான, தரமான வேலைவாய்ப்பு களுடன், கூடுதல் பணியாளர்களை பணியமர்த்தும் பெருந்தொழில் நிறுவனங்கள் வரிச் சலுகை பெற ஏதுவாக, வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை (ELI) என்ற புதிய திட்டத்தைநாங்கள்அறிமுகப்படுத்துவோம்.
- அறிவுசார் சொத்துரிமைக்கு நாங்கள் உயர் முன்னுரிமை அளிப்பதுடன், பதிவு செய்தல், கையகப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் சிறிய, நடுத்தர மற்றும் பெருந்தொழில்களின் அறிவுசார் சொத்துரிமையை (IPR) பயன்படுத்தவும் முன்னுரிமை அளிப்போம்.
- அனைத்து தொழில்களுக்கும் உகந்த சமவாய்ப்புகளை காங்கிரஸ் உருவாக்கும். ஏகபோக ஆதிக்கம், ஒரு தொழிலில் ஒரு நிறுவனம் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம். இந்தியா, வெளிப்படையான மற்றும் போட்டிகள் மிகுந்த பொருளாதாரம் என்பதை உறுதிசெய்யும் விதமாக, இந்தியத் தொழில் போட்டி ஆணையத்தை நாங்கள் வலுப்படுத்துவோம்.
- பெருந்தொழில் நிறுவனங்களுக்கான வரிவிதிப்பை எளிமைப்படுத்தி, வரி பயங்கரவாதத்திற்கு காங்கிரஸ் முடிவு கட்டும். பெருந்தொழில் நிறுவனங் களுக்குச் சலுகை அளிக்கும் விதமாகவோ

அல்லது தண்டிக்கும் விதமாகவோ, புலனாய்வு அமைப்புகள், தங்களது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தாத வகையில் கட்டுப்படுத்துவதுடன், சட்டத்தின் கடுமையான வரம்புகளுக் குட்பட்டு செயல்படுவதை உறுதி நாங்கள் செய்வோம்.

- புதிய மற்றும் முன்னணி வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் போன்றவற்றின் பயன்பாட்டை நாங்கள் ஊக்குவித்து, ஆதரவு அளிப்போம்.


# கட்டமைப்பு வசதி

பொருளாதாரத்திற்கான வன்பொருளே, சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் மின்சாரம் தான். உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, மூலதனச் செலவு மற்றும் நவீன தொழில்நுட்பங்களைத் திரட்டுவது அவசியம். பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப, கட்டமைப்புகளை உருவாக்குவதில் பல்வேறு நவீன மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும்.




- காங்கிரஸ் கட்சி, அரசு மற்றும் தனியார் முதலீட்டைத் திரட்டி, கட்டுமானப் பணிகளின் வேகத்தை அதிகரித்து, கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தும். வடிவமைப்பு, தரம், செயல்பாட்டு வேகம், பராமரிப்பு மற்றும் பொறுப் புணர்வில் கவனம் செலுத்தப்படும்.
- பொதுச் சொத்துகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க தனியார் முதலீட்டை ஈர்ப்பது அவசியம். சொத்துக்களை உருவாக்க அரசுப் பணத்தைப் பயன்படுத்தி, பின்னர் அவற்றை தனியாருக்கு தாரை வார்த்ததன் மூலம், பாஜக அரசு, இந்த மாதிரியை தலைகீழாக மாற்றிவிட்டது. அரசுப் பணம் இதுபோன்று கொள்ளையடிக்கப் படுவதை, காங்கிரஸ் தடுத்து நிறுத்தும்.
- காலாவதியான இரயில்வே கட்டமைப்பு களை நவீனப்படுத்துவதன் மூலம், இரயில்களும், இரயில் நிலையங்களும் சாமான்ய மக்கள் மற்றும் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நம்மால் உறுதிசெய்ய முடியும். ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத் தினருக்கான இரயில் சேவைகள் மற்றும் வசதிகள், தொடர்ந்து வழங்கப்படும்.
- ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி யின்போது, கவாச் எனப்படும் மோதல் தடுப்பு சாதனம் உருவாக்கப்பட்டது. இந்திய இரயில்வேயில் பயணிகள் பாதுகாப்பை மேம்படுத்த, அனைத்து ரயில் எஞ்சின்கள் மற்றும் வழித்தடங் களிலும், கவாச் பொருத்தப்படும்.

- போக்குவரத்து வசதிகள் மற்றும் கிராமப்புறங்களுக்கும், அருகிலுள்ள நகரம்/மாநகரத்திற்கும் இடையிலான இணைப்பு வசதியை அதிகரிப்பதன் மூலம், மக்கள் கிராமப் பகுதிகளிலேயே வசித்துக்கொண்டு, நகர்ப்புறங்களில் பணியாற்ற வகை செய்யப்படும்.
- நகர்ப்பகுதிகளில், பல்வகை பொதுப் போக்குவரத்திற்கான விரிவான திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம்.
- நெடுஞ்சாலை சுங்கக் கட்டணங்கள் மிக அதிகமாக உள்ளதென்றும், தாங்கள் சுரண்டப்படுவதாகவும், சாலைகளைப் பயன்படுத்துவோர் கருதுகின்றனர். எனவே, நெடுஞ்சாலை சுங்கக் கட்டணக் கொள்கை மறுஆய்வு செய்யப்பட்டு, சுங்கக் கட்டணம் மற்றும் நெடுஞ்சாலையின் ஒவ்வொரு தொலைவுக்குமான கட்டண வசூல் காலவரம்பை நிர்ணயிப்பதற்கும் விதிமுறைகள் பயன்படுத்தப்படும்.
- துறைமுகங்கள் / விமான நிலையங்களிடையே திறமை மற்றும் போட்டித் தன்மையை ஊக்குவிக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கான கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று உருவாக்கப்படும்.
- பசுமை எரிசக்தியை நாங்கள் ஊக்குவிப்போம். பஞ்சாயத்துகள், நகராட்சிகள், தங்களது மின்சாரத் தேவையில் இயன்றவரை தன்னிறைவு பெறும் வகையில், புதுப்பிக்கத்தக்க மின்சாரத் திட்டங்களை நாங்கள் செயல்படுத்துவோம். விவசாயத்திற்காக நிலத்தடி நீரை எடுப்பதற்கு, சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பயன்பாட்டை நாங்கள் ஊக்குவிப்போம்.
- உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுச்சூலலைப் பேணிக்காத்து பாதுகாக்கும் விதமாக, இயற்கை வளங்களைக் கண்டறிந்து அவற்றைப் பிரித்தெடுக்க, நவீன அறிவியல் முறைகளை நாங்கள் உறுதி செய்வோம். இதுபோன்ற திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது நகராட்சி பிரதிநிதிகளிடம் கலந்தாலோசனை நடத்தப்படும்.



# கூட்டாட்சி



## மத்திய – மாநில உறவுகள்

'மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியா' என்பதற்கு அடித்தள கொள்கையே கூட்டாட்சி தான். மத்திய – மாநில அரசுகளுக்கிடையேயான பரஸ்பர நம்பிக்கையால் பிணைக்கப்பட்ட இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பை , பாஜக அரசு திட்டமிட்டு அழித்துவிட்டது. இந்தியாவை, மத்திய அரசால் மட்டும் நிர்வகிக்க முடியாது என்பதில் காங்கிரஸ் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கை தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளில், மாநில அரசும், சில பிரச்சினைகளில் உள்ளாட்சி அமைப்புகளும் (பஞ்சாயத்து அல்லது நகராட்சி) தான் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக உள்ளன.

1. அரசியல் சாசனத்தின் ஏழாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள சட்டமன்றத் துறைகளை பகிர்ந்தளிப்பது குறித்து நாங்கள் மறுஆய்வு செய்து, III-வது பட்டியலில் (பொதுப் பட்டியல்) உள்ள சில துறைகளை, II-வது பட்டியலுக்கு (மாநிலப் பட்டியல்) மாற்றுவது குறித்து கருத்தொற்றுமை ஏற்படுத்தப்படும்.

2. ஒரே நேரத்தில் இந்தியா ஒன்று மற்றும் பல என்ற நிலையில் உள்ளது. அதன் பன்முகத்தன்மைக்கு இணங்கி கொண்டாடும்போது தான், ஒற்றுமை வலுப்பெறும். இதுவே, காங்கிரசின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது, இனியும் தொடரும். அரசியல் சாசனத்தின் பிரிவு 1, "இந்தியா, அதாவது பாரதம் என்பது மாநிலங்களின் ஒன்றியம்" என்ற வார்த்தைகளுடன் தான் தொடங்குகிறது. இது தான் நம் நாட்டின் கூட்டாட்சிக்கு வழிகாட்டும் கொள்கை ஆகும்.

3. வரி வருவாயில், மாநிலங்களுக்கு உரிய பங்கை வழங்க மறுக்கும் பாஜக அரசின் போலியான "செஸ்" ராஜ்ஜியத்திற்கு காங்கிரஸ் முடிவு கட்டும். மொத்த வரி வருவாயில் மத்திய செஸ் வரி மற்றும் கூடுதல் வரிகளை 5 சதவீதமாக குறைக்க வகை செய்யும் சட்டத்தை நாங்கள் அறிமுகம் செய்வோம்.

4. மத்திய வரி வருவாயில், மாநிலங்களுக்கான பங்கை தீர்மானிப்பதற்கு, மக்கள்தொகை, செயல்திறன் மற்றும் வரி முயற்சி போன்ற அம்சங்களை, கணக்கில்கொள்ளுமாறு, நிதி ஆணையத்திற்கு நாங்கள் அறிவுறுத் துவோம். ஜிஎஸ்டி வருவாயிலிருந்து கிடைக்கும் பங்கு உட்பட, பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளுக்கு நேரடியாக நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறையை உருவாக்க, நாங்கள் மாநிலங்களுடன் இணைந்து பணியாற்றுவோம்.

5. வேகமான நகரமயமாதலைக் கருத்தில்கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பான நிர்வாகத்திற்கு, மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட மேயர்/தலைவர்களுக்கு கூடுதல் ஆட்சி, நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களை வழங்க ஏதுவாக நாங்கள் சட்டத்தை திருத்துவோம். சம்பந்தப்பட்ட நிர்வாகம், மேயர்/தலைவர் மற்றும் கவுன்சிலுக்கு (மன்றத்திற்கு) கட்டுப்பட்டதாகும்.

6. அரசியல் சாசனத்தின் 73-வது மற்றும் 74-வது திருத்தங்களைக் கொண்டு வந்தவர்கள் என்ற முறையில், பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளுக்கான நிதிப் பகிர்வு, அவற்றின் செயல்பாடு மற்றும் செயல்பாட்டாளர்கள் தொடர்பான நடைமுறைகளை, எழுத்து மற்றும் உணர்வுப்பூர்வமாக நடைமுறைப் படுத்துமாறு, காங்கிரஸ் கட்சி, மாநிலங்களை அறிவுறுத்துவோம்.

7. கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைகளில், கிராம சபாக்களின் பங்கு மற்றும் அதிகாரத்தை, காங்கிரஸ் அதிகரிக்கும். கீழ்காணும் சட்டங்களில், கிராமசபாக்களின் நிர்வாக அதிகாரத்தை நாங்கள் அதிகரிப்போம்.

(அ) பஞ்சாயத்துகள் (திட்டமிட்ட பகுதிகளுக்கு நீட்டிக்கக் கூடியது) சட்டம், 1996.

(ஆ) வன உரிமைகள் சட்டம், 2006.

(இ) நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2013.

8. வடகிழக்கு மாநிலங்களில் செயல்படும் தன்னாட்சி மாவட்ட கவுன்சில்களுக்கான நிதி உதவியை, காங்கிரஸ் உயர்த்தி வழங்கும்.

9. ஜம்மு – காஷ்மீருக்கு உடனடியாக நாங்கள் மீண்டும் முழு மாநில அந்தஸ்தை வழங்குவோம். லடாக்கின் பழங்குடியினர் பகுதிகளையும் இணைக்கும் விதமாக, அரசியல் சாசனத்தின் ஆறாவது அட்டவணையில் நாங்கள் திருத்தம் கொண்டு வருவோம்.


10. 20 பிப்ரவரி 2014இல் நாங்கள் உறுதியளித்தபடி ஆந்திரப்பிரதேச மாநிலத்திற்கு, சிறப்பு அந்தஸ்து வழங்குவோம்.

11. டெல்லி தேசிய தலைநகர் பிராந்திய அரசு சட்டம், 1991-ல் நாங்கள் திருத்தம் கொண்டுவந்து, ஒதுக்கப்பட்ட மூன்று அம்சங்களைத் தவிர மற்ற அனைத்துப் பிரச்சினைகளிலும், டெல்லி தேசிய தலைநகர் பிராந்தியத்தின் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனை களின்படியே துணைநிலை ஆளுனர் செயல்பட வேண்டுமென அறிவிப்போம்.

12. புதுச்சேரிக்கு, முழு மாநில அந்தஸ்தை நாங்கள் வழங்குவோம்.

# ஊரக மற்றும் நகர்ப்புற மேம்பாடு

இந்தியா எதிர்நோக்கும் இரண்டு யதார்த்தங்கள் (1) ஏறத்தாழ 60 சதவீத மக்கள், கிராமப்புறங்களில் தான் வசிக்கின்றனர், மற்றும் (2) நகரமயமாதல் துரிதகதியில் நடைபெற்று வருகிறது. எனவே, கிராமப்புற வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சியில் நாங்கள் சம அளவு கவனம் செலுத்தி, நமது கிராமங்கள் மற்றும் நகரங்கள்/மாநகரங்களில் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவோம்.



வாழ்வாதாரம், வீட்டுவசதி, தண்ணீர், மின்சாரம், வாழ்விடம், மாசு, பருவநிலை மாற்றம், போக்குவரத்து மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற சில அம்சங்கள், கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களுக்கும் பொதுவானவை ஆகும்.

- கிராமப்புறங்களுக்காக, வீட்டுமனை உரிமைச் சட்டத்தை காங்கிரஸ் நிறைவேற்றுவதுடன், பிரதமரின் கிராமப்புற சாலைகள் திட்டத்தை, அனைத்து கிராமங்கள் மற்றும் வசிப்பிடங்களுக்கும் நீட்டிப்பதோடு, நிதியையும் உயர்த்தி வழங்குவதுடன், தேசிய குடிநீர் இயக்கம் செயல்படுத்தப் படும் வேகத்தை விரைவுபடுத்துவோம்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தினசரி ஊதியத்தை ரூ.400ஆக நாங்கள் உயர்த்தி வழங்குவோம். MGNREGA நிதி, தொழிலாளர்கள், வகுப்பறை, நூலகம் மற்றும் ஆரம்ப சுகாதார மையம் போன்ற பொதுச்சொத்து கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடுத்தப் படுவார்கள்.
- நகர்ப்புற ஏழைகளுக்கு வேலை அளிக்கும் விதமாக, நகர்ப்புற கட்டமைப்புகளை சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற நகர்ப்புற வேலை உறுதித் திட்டத்தை நாங்கள் தொடங்குவோம்.
- தற்போதுள்ள மாநகரங்களின் அக்கறை யில்லா விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்த, தற்போதுள்ள மாநகரங்களுக்கு அருகிலேயே, பழைய மற்றும் புதிய நகரங்களுக்கு இடையே தெளிவான பசுமை மற்றும் கட்டுமானம் இல்லாத மண்டலத்தால் பிரிக்கப்பட்ட இரட்டை நகரத்தை உருவாக்க காங்கிரஸ் ஆதரவளிக்கும்.
- நகர்ப்புற ஆட்சிமுறையை மேம்படுத்த, மன்ற உறுப்பினர்களுடன், 5 ஆண்டு நிலையான பதவிக்காலம் கொண்ட மேயர் / தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவார். மேயர் / தலைவருக்கு, செயல்பாட்டு, நிதி, நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்படும். நிர்வாகம், மேயர் / தலைவர் மற்றும் மன்றத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்கும்.
- மக்கள், கிராமப்புறங்களில் வசித்துக் கொண்டே, நகர்ப்புறங்களுக்கு வந்து

பணியாற்றிச் செல்ல ஏதுவாக, கிராமப் புறங்கள் மற்றும் அருகிலுள்ள நகரம் / மாநகரத்துடனான போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

- நகர்ப்புறங்களில் பல்வகை பொதுப் போக்குவரத்துக்கான விரிவான திட்டத்தை, காங்கிரஸ் செயல்படுத்தும்.
- நகரம் மற்றும் மாநகரங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பயணம் / போக்குவரத்து, பாதுகாப்பானதாக இருக்கும்.
- தெரு நாய்களின் தொல்லை அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக அதிகரித்துள்ளது. மனிதர்களை (குறிப்பாக குழந்தைகளை) பாதுகாக்கும் விதமாக, விலங்குகளிடம் மனிதநேயத்துடன் அணுகும் வகையிலான தீர்வு காணப்படும்.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளுக்கு, நிதி, செயல்பாடுகள் மற்றும் செயற்பாட்டாளர்களை பகிர்ந்து கொள்வதற்கான, அரசியல் சாசனத்தின் 73 மற்றும் 74வது திருத்தங்களை, முழுமையாக (எழுத்து, உணர்வுப்பூர்வமாக) நிறைவேற்றும்படி, மாநிலங்களை அறிவுறுத்துவோம்.

# வடகிழக்கு மாநிலங்கள்

இந்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட வடகிழக்கு மாநிலங்கள், இந்தியாவின் பன்மை மற்றும் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கின்றன. பல்வேறு இனங்கள், மதங்கள், மற்றும் மொழிகளின் தாயகமாகத் திகழும் பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் வசிப்பவர்கள் என்பதில் நாம் பெருமிதம் அடைவோம்.



- வடகிழக்கு மாநிலங்களின் கட்டமைப்பு வசதி பற்றாக்குறையை நாங்கள் மதிப்பீடு செய்து, கட்டமைப்பு வசதிகளை ஏப்டுத்த, நாங்கள் அதிக நிதி ஒதுக்குவோம்.
- நாங்கள் எல்லைப்புற வர்த்தகத்திற்கு ஆதரவளிப்பதுடன், அதுபோன்ற வர்த்தகத்தின் அளவு மற்றும் மதிப்பை அதிகரிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.
- காங்கிரஸ், வடகிழக்கு மாநிலங்களின் தன்னாட்சி மாவட்ட கவுன்சில்களுக்கு (ADCs) புத்துயிரூட்டி, அவற்றை உள்ளாட்சி அமைப்பின் பயனுள்ள சாதனமாக மாற்றும். வளர்ச்சிப் பணிகளுக்காக, ADC-க்கள் வாயிலாக அதிக நிதி வழங்குவதை நாங்கள் உறுதி செய்வோம்.
- பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின்படி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான ஊதியம் மற்றும் பிற சலுகைகள் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம்.
- பாஜக அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பு காரணமாக, மனிப்பூர் நிலவரம் மோசம் என்ற நிலையிலிருந்து படுமோசமான நிலைக்குச் சென்றுள்ளது. காங்கிரஸ் கட்சி, தற்போதுள்ள மாநில அரசை உடனடியாக அகற்றிவிட்டு, மக்களின்

மனதில் ஏற்பட்டுள்ள ஆறாத காயங்களைக் குணப்படுத்தும். அரசியல் மற்றும் நிர்வாக ரீதியான தீர்வுகாண, அம்மாநிலத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மனநிறைவு அளிக்கக்கூடிய சரிபார்ப்பு ஆணையம் ஒன்றை நாங்கள் அமைப்போம்.

- மனிப்பூர் கலவரத்தில் பாதிக்கப் பட்டோர் மற்றும் உயிர்பிழைத்தோருக்கு தகுந்த இழப்பீடு மற்றும் தீர்வு கிடைப்பதை நாங்கள் உறுதி செய்வோம்.
- 2013-14இல் ஒப்புக்கொள்ளப்பட்ட பூர்வீக ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாகா குழுக்களிடையே இறுதித் தீர்வு மற்றும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்.

# தேசப் பாதுகாப்பு




## தற்காப்பு

லடாக்கில் சீன ஊடுருவல் மற்றும் 2020ல் கல்வான் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட மோதல், சமீபத்திய தசாப்தங்களில் இந்தியாவின் தேசப் பாதுகாப்பில் ஏற்பட்ட பெரும் பின்னடைவை உணர்த்துகிறது. 19 ஜூன் 2020 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, சீனாவுக்கு வழங்கிய நற்சான்று, நமது பேச்சுவார்த்தைத் திறனை கணிசமான அளவு மோசமடையச் செய்துவிட்டது. இராணுவ அளவில் 21 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியும், சீனப் படைகள் தொடர்ந்து இந்தியப் பகுதிகளை ஆக்கிரமித்து வருவதுடன், மொத்தமுள்ள 65 ரோந்து மையங்களில், 26 இடங்களுக்குள், அதாவது கிழக்கு லடாக்கின் 2,000 சதுர கிமீ பரப்பளவில், இந்தியப் படைகள் நுழைவதற்கு அனுமதி மறுத்துவருகிறது. டோக்லாமில் சீனப் படைகள் மேற்கொண்டுள்ள கட்டுமானம், வடகிழக்கு இந்தியாவை, நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் சிலிகுரி எல்லையில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது.

1. முறையான தேசியப் பாதுகாப்பு செயல்திட்டம் இல்லாததால், தற்காலிக மற்றும் தனிப்பட்ட கொள்கை உருவாக்கத்திற்கு வழிவகுத்துள்ளது. விரிவான விவாதங்களுக்குப் பிறகு, விரிவான தேசியப் பாதுகாப்பு செயல் திட்டம ஒன்றை காங்கிரஸ் வெளியிடும்.
2. பாதுகாப்பு அமைச்சரின் செயல்பாட்டு உத்தரவுகள், ஆயுதப்படைகளின் போர் திட்டமிடலைத் தீர்மானிக்கிறது.

இதுபோன்ற கடைசி உத்தரவு, 2009இல், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது தான் பிறப்பிக்கப்பட்டது. எனவே, தற்போதைய இருமுனை சவால்களை எதிர்கொள்ளும் விதமான, புதிய செயல்பாட்டு உத்தரவு ஒன்றை, காங்கிரஸ் கொண்டுவரும்.

3. பாதுகாப்புப் படைகளின் தலைவர் (CDS) என்பது, பொறுப்புள்ள மற்றும் ராணுவ சீர்திருத்தம், போர் ஆயத்த நிலை மற்றும் கூட்டு நடவடிக்கைகளுக்கான முக்கியப் பதவி ஆகும். எனவே, வெளிப்படைத் தன்மை மற்றும் இராணுவ கருத்தொற்றுமையை உறுதிசெய்யத்தக்க, CDS நியமன முறைகளை அமைப்பு ரீதியாக காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கும்.

4. மொத்த செலவினத்திற்கேற்ப இராணுவ செலவினத்தில் ஏற்பட்டுள்ள குறைவை நாங்கள் மாற்றியமைப்பதோடு, ஆயுதப்படைகளின் தேவையை ஈடுகட்டத் தேவையான நிதி ஒதுக்கி, அவை செலவிடப்படுவதை உறுதி செய்வோம்.

5. காங்கிரஸ், அக்னிபாத் திட்டத்தைக் கைவிட்டு, இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகள், வழக்கமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி, நமது வீரர்களுக்கு பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க வகை செய்யும்.

6. ஆயுதப் படைகளில் போர்ப் பிரிவு மற்றும் போர் அல்லாத பிரிவுகளில் பெண்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை, காங்கிரஸ், திட்டமிட்ட வகையில் விரிவுபடுத்தும்.

7. தேசியப் பாதுகாப்பு கவுன்சில் (NSC) மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (NSA), நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப் படுவார்கள்.

8. 21ஆம் நூற்றாண்டில், தேசியப் பாதுகாப்பு என்ற கருத்தம்சம், ஒரு பகுதியின் பாதுகாப்பு என்பதையும் கடந்து, கலப்பு போர்முறை, தரவு பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, நிதிப் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு பாதுகாப்பு மற்றும் வர்த்தக வழித்தடப் பாதுகாப்பு என்று விரிவடைந்துள்ளது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றுக்கும் தீர்வுகாண்பதற்கு ஏற்ற கொள்கைகளை காங்கிரஸ் உருவாக்கும்.

9. தேசியப் பாதுகாப்பு கவுன்சிலின் கட்டுப்பாட்டில், கீழ்காணும் நோக்கங்களுடன் செயல்படக்கூடிய தேசிய பொருளாதார பாதுகாப்பு வாரியம் ஒன்றை காங்கிரஸ் உருவாக்கும்:

(அ) உலகளாவிய விநியோகச் சங்கிலியில் ஏற்படக்வடிய இடையூறுகளைக் கண்காணித்து, எதிர் நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க;

(ஆ) பெருமளவிலான இறக்குமதி ஆதாரங்களை அளவுக்கு அதிகமாக சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க;

(இ) உலகளவில் இந்தியா கால்தடம் பதிப்பதை வலுப்படுத்த, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மேற்கொள்ள வேண்டிய முதலீடுகள் குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க;

(ஈ) உலகளாவிய நிதிப் புழக்கத்தைக் கண்காணித்து, இந்தியாவுக்கு எதிரான அச்சுறுத்தல் வாய்ப்புகளை அடையாளம் காண்பதோடு, அவற்றை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்வது; மற்றும்

(உ) இந்தியாவின் டிஜிட்டல் நிதிக் கட்டமைப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய டிஜிட்டல் / இணையபாதுகாப்பு விவகாரங்களில் பணியாற்றுவதற்கு.

10. இராணுவம் மற்றும் பாதுகாப்புக்கான வன்பொருட்கள் மற்றும் சாதனங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் திறனை விரைவாக அதிகரிக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

11. ஒரே பதவிக்கு ஒரே ஓய்வூதியம் (OROP) திட்டம், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் 26 பிப்ரவரி 2014 தேதியிட்ட உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தப் படும். பாஜக அரசால் OROP திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது எழுந்த குறைபாடுகளுக்குத் தீர்வு காணப்படும். உடல்திறன் பாதிக்கப்பட்டோருக்கான ஓய்வூதியம் மீண்டும் வழங்கப்படுவதோடு, அது வரிவிலக்குப் பெற்றதாக ஆக்குவோம்.

# உள்நாட்டுப் பாதுகாப்பு

2008–ல் நிகழ்ந்த மும்பை தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு, உள்நாட்டுப் பாதுகாப்பு நடைமுறைகளை காங்கிரஸ் மாற்றியமைத்ததோடு, எண்ணற்ற சீர்திருத்த நடவடிக்கைகளையும் செயல்படுத்தியது. துரதிருஷ்டவசமாக, இந்த நடைமுறையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதுதவிர, வெறுப்புப் பேச்சுகள், வெறுப்புக் குற்றங்கள் மற்றும் சமூக சச்சரவுகள் அதிகரிப்பும், நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.



- வெறுப்புப் பேச்சுகள், வெறுப்புக் குற்றங்கள் மற்றும் சமூக மோதல்களை, காங்கிரஸ் இரும்புக் கரம் கொண்டு அடக்கும். தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) புள்ளிவிவரங்களின் படி, பெண்கள், எஸ்சி, எஸ்டி மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளது. இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளி களையும், அவர்களுக்கு நிதியுதவி அளிப்போரையும், அடையாளங்கண்டு, அவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப் படுவார்கள்.
- நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்ட முறை யிலான குழுத் தாக்குதல், காவல்துறை என்கவுண்டர் கொலைகள் மற்றும் புல்டோசர் தீர்ப்புகளை, காங்கிரஸ் உறுதியோடு எதிர்க்கிறது. நாங்கள் இவற்றை உடனடியாக நிறுத்துவதோடு, இச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.
- 2008 சீர்திருத்தங்களின் நிறைவேறாத செயல்திட்டம் வருமாறு:
  - NATGRID மற்றும்
  - தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம்.
- இவ்விரு அம்சங்களையும், காங்கிரஸ் கையிலெடுத்து, பணிகளை நிறைவேற்றி, அவற்றை ஓராண்டுக்குள் செயல்பாட் டிற்குக் கொண்டுவரும்.
- உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலின்போது, மாநில காவல்துறை தான் முதலில் நடவடிக்கை எடுக்கும். மாநில காவல்படைகளை உருவாக்கி, அவர்களுக்குப் பயிற்சி, ஆயுதம் வழங்கி, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதோடு, குற்றவாளிகள் மீது, பாரபட்சமற்ற நடவடிக்கை எடுப்பதில், காங்கிரஸ் மாநில அரசுகளுடன் இணைந்து பாடுபடும்.
- போதைப்பொருள் கடத்தல், விற்பனை, போன்றன இரும்புக்கரம் கொண்டு

ஒடுக்கப்படும். துறைமுகங்கள் வாயிலாக போதைப்பொருட்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருகிறது. கட்டுப்பாடு, தண்டனை நடைமுறைகள் வலுப்படுத்தப்படுவதுடன், போதைப்பொருள் கடத்துவோர், ஆள்கடத்துவோர் மற்றும் அவர்களது கூட்டாளிகள், சட்ட விதிகளின்படி கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) பலம், மேலும் அதிகரிக்கப்பட்டு, நவீனமயமாக்கப்படும். இந்தப் படையினரில் 33 சதவீதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும் என்பதே நமது குறிக்கோள். பணி விதிகள் மாற்றியமைக்கப்பட்டு, காலத்திற்கேற்ப மேம்படுத்தப்படும். பணியில் ஈடுபடுத்தப்படும் வீரர்களுக்கு உரிய பயிற்சி, ஓய்வு, ஆரோக்கிய மீட்பு தேவைப்படும்.
- மத்திய ஆயுதக் காவல் படைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி, ஒப்பளிக்கப்பட்ட முழு பணியாளர் எண்ணிக்கையை அடைய நாங்கள் பாடுபடுவோம்.

# வெளியுறவுக் கொள்கை



1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தொடர்ந்து நிலைநாட்டப்படும் என காங்கிரஸ் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறது. எங்களது அணுகுமுறை, சுதந்திரப் போராட்டத்தால் ஆழமாக வடிவமைக்கப்பட்டு, ஜவஹர்லால் நேரு போன்ற தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைவர்களின் ஞானத்தால் வளர்க்கப்பட்டது ஆகும்.

2. நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்தே, வெளியுறவுக் கொள்கையில் தொடர்ந்து ஒருமித்த கருத்தே நிலவுகிறது.

துரதிருஷ்டவசமாக, பாஜக ஆட்சியின் வெளியுறவுக் கொள்கை, பல விவகாரங்களில், கருத்தொற்றுமை நிலையிலிருந்து விலகிச் சென்றுள்ளது, குறிப்பாக தற்போது நடைபெற்றுவரும் காஸா மோதலில் இதைக் காண முடிந்தது. சர்வதேச விவகாரங்களில் அமைதிக்காக குரல் கொடுத்து, நிதானப் போக்கைக் கடைப்பிடிக்கும் நாடு என்ற இந்தியாவின் உலகளாவிய நற்பெயரை மீண்டும் நிலைநாட்ட காங்கிரஸ் உறுதியேற்கிறது.

3. அமைதியான சக-வாழ்வு, ராணுவ சிந்தனை மற்றும் நடவடிக்கைகளில் தன்னாட்சி, உலக நாடுகளுடனான தனது நட்புறவில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அதிகரிக்க வேண்டும் என்ற, நீண்டகாலமாக பின்பற்றப்படும் கொள்கை தொடர வேண்டும் என்ற உறுதிப்பாட்டை, காங்கிரஸ் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

4. பன்னாட்டு அமைப்புகளில் இந்தியாவின் பங்களிப்பை வலுப்படுத்தவும், முக்கியப் பிரச்சினைகளில் உலகளாவிய தெற்கில் உள்ள பிற நாடுகளுடன் ஒன்றுபட்டு பொறுப்புகளை மேற்கொள்வதுடன், எல்லைதாண்டி ஏற்படும் பெரும் சவால்களை எதிர்கொள்ள ஏதுவாக, சர்வதேச அமைப்புகளுக்கு அதிகாரமளித்து அவற்றில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்.

5. மேம்பட்ட வெளிநாட்டு வர்த்தகம், நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக திகழ்வதோடு, இந்திய உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் நலன்கருதி, பிற நாடுகளுடன் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

6. தீவிரவாதம், உலகின் எந்தப் பகுதியில் நிகழ்ந்தாலும், காங்கிரஸ் அதனை உறுதியாக எதிர்க்கும். தீவிரவாதக் குழுக்கள், தீவிரவாத செயல்கள் மற்றும் எல்லை-தாண்டிய பயங்கரவாதத்தை ஒழிப்பதில், பிற நாடுகளுடன் இணைந்து நாங்களும் பணியாற்றுவோம்.

7. தற்போதைய அரசின் சகிப்புத்தன்மை இன்மையால் ஏற்பட்ட அதிருப்தி மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறைகளால், சர்வதேச அளவில் இந்தியாவின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரைப் போக்க காங்கிரஸ் பாடுபடும்.

8. நமது எல்லைப்பகுதி நிலவரம் குறித்து போதிய கவனம் செலுத்தாமலும், உறுதியான ராணுவ ஆயத்த நிலையை மேற்கொள்ளாமலும் இருந்துவிட்டு, மார் தட்டுவதாலோ அல்லது பெரிதுபடுத்திக் கூறுவதாலோ மட்டும் தேசப் பாதுகாப்பு மேம்பட்டுவிடாது என்பதை காங்கிரஸ் ஏற்றுக்கொள்கிறது. சீன எல்லையில் முன்பிருந்த நிலையை மீண்டும் ஏற்படுத்தவும், முன்பு இரு நாட்டு ராணுவத்தினரும் ரோந்து மேற்கொண்ட இடங்களுக்கு நமது வீரர்கள் மீண்டும் செல்வதை உறுதி செய்யவும் நாங்கள் பாடுபடுவோம். இதனை அடையும்வரை, சீனாவுடனான நமது கொள்கையை மாற்றத் தேவையான நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

9. நமது உடனடி அண்டை நாடுகள் மீது காங்கிரஸ் அதிககவனம் செலுத்தும். இருதரப்பும் பலனடையும் விதமாக, நேபாளம் மற்றும் பூடான் நாடுகளுடனான நமது சிறப்புவாய்ந்த நட்புறவுதான் முதன்மையானது என்ற நிலையை மீண்டும் ஏற்படுத்துவோம். தெற்காசியாவில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகளான, இந்தியா – பங்களாதேஷ் இடையிலான பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை நாங்கள் மேம்படுத்துவோம். இருதரப்பு அரசியல் மற்றும் வர்த்தக உறவுகளை மீண்டும்

ஏற்படுத்தவும், இலங்கையின் அரசியல் பிரச்சினைகளுக்கு, குறிப்பாக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும், இலங்கையுடன் இணைந்து பாடுபடுவோம். மாலத்தீவுடன் சீர்குலைந்துள்ள உறவை சரிசெய்வதோடு, மியான்மர் நாட்டு மக்களின் அரசியல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்க மியான்மர் நாட்டுடனும் இணைந்து பணியாற்றுவோம்.

10. பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகள் அந்நாட்டின் விருப்பத்தைப் பொறுத்தும், எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் அடிப்படையிலுமே மேற்கொள்ளப்படும்.

11. இந்திய வெளியுறவுப் பணியின் வரம்பை கணிசமாக அதிகரிப்பதோடு, வெளிநாடுகளில் மேலும் அதிக தூதரகங்களைத் திறப்பதுடன், நமது பொருளாதார வலிமையையும் அதிகரித்து, நாட்டின் மீதான நன்மதிப்பு மற்றும் பரஸ்பர பலன் அளிக்கக்கூடிய பொருளாதார உறவுகள் வாயிலாக தலைமைத்துவத்தை அடையவும் காங்கிரஸ் பாடுபடும்.

12. வெளிநாடுவாழ் இந்தியர்கள் விவகாரங்களைக் கையாள, வெளியுறவு அமைச்சகத்தில் இணையமைச்சர் பதவியை மீண்டும் ஏற்படுத்தி, அவர்களது பிரச்சினைகளுக்கு, ஒரே இடத்தில் தீர்வுகாணவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

# சுற்றுச்சூழல்



## சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை

விரைவான, உள்ளடக்கிய மற்றும் நீடித்த வளர்ச்சி மற்றும் அதன் சூழலியல், உள்ளூர் மக்கள், தாவரங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பது குறித்த உறுதியான நிலைப்பாட்டை காங்கிரஸ் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்த நோக்கத்தை செயல்படுத்துவதற்கான சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புகளை முதலில் உருவாக்கியவர், அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி என்பதை நாங்கள் நினைவுகூர்கிறோம். பருவநிலை மாற்றம்

தொடர்பான தேசிய செயல்திட்டம், பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் தான் தயாரிக்கப்பட்டது. இந்த செயல்திட்டம் குறித்த பாஜக-வின் அவதூறான விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல் விட்ட நிலையில், பின்னாளில், பாஜக அரசு இதன் தேவை மற்றும் முறையான முடிவுகளை ஏற்றுக்கொண்டது. எனினும், முந்தைய கொள்கைகளிலிருந்து பலமுறை மாறுபட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு, உயிர்ப்பன்மை பாதுகாப்பு, கடலோர மண்டல ஒழுங்குமுறை, ஈரநில பாதுகாப்பு மற்றும் பழங்குடியினரின் உரிமைகள் பாதுகாப்பு போன்றவை செயலிழக்கச் செய்யப்பட்டது.

காற்று மாசும், தண்ணீர் மாசும், மக்களின் ஆரோக்கியத்தில் தொடர்ந்து கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. பழங்குடியினர் மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில், வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றப் பிரச்சினைகளுக்கு, அவற்றின் தன்மையைப் பொருத்து காங்கிரஸ் உரிய கவனம் செலுத்தும்.

1. சுதந்திரமான சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்ற கண்காணிப்புக்கு, ஆணையம் ஒன்றை நாங்கள் ஏற்படுத்துவதுடன், சுற்றுச்சூழல் தரத்தை நடைமுறைப்படுத்தி, தேசிய மற்றும் மாநில பருவநிலை மாற்றத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துவோம்.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நிலையான கட்டமைப்பு மற்றும் பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தக்கூடிய, புதிய பசுமை முதலீட்டுத் திட்டங்களை நாங்கள் தொடங்குவோம்.

3. காற்று மாசு பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண ஏதுவாக, தேசிய தூய்மையான காற்றுத் திட்டத்தை நாங்கள் வலுப்படுத்துவோம்.

4. இந்தியாவில் உள்ள ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில், கழிவுகளை வெளியேற்றுவதைத் தடுக்க, மாநில அரசுகளுடன் இணைந்து காங்கிரஸ் பணியாற்றும்.

5. மலை மாவட்டங்களில் நிலச்சரிவு பிரச்சினை குறித்து ஆராயவும், நிலச்சரிவைத் தடுக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை உருவாக்கவும், உயர்மட்டக் குழு ஒன்றை காங்கிரஸ் நியமிக்கும்.

6. நாட்டின் கடலோர மண்டலங்களை, காங்கிரஸ் பாதுகாக்கும். மீனவ சமுதாயத்தினரின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காமல், கடலோர மண்டலங்கள் பாதுகாக்கப்படும்.

7. 2015ஆம் ஆண்டுக்கும் 2020ஆம் ஆண்டுக்கும் இடையே, பிரேசிலுக்குப் பிறகு, இந்தியா, வனப்பகுதிகளை பெருமளவு இழந்துள்ளது. வனப்பரப்பை அதிகரிக்க மாநில அரசுகளுடன் இணைந்து நாங்கள் பணியாற்றுவதுடன், 'காடுகள்' மற்றும் 'வனப்பரப்பு' என்பவற்றை நவீன அறிவியல் தரங்களின்படி மறுவரையறை செய்வதோடு, காடுவளர்ப்பில் உள்ளூர் மக்களையும் ஈடுபடுத்துவோம்.

8. நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும், குறைந்த விலையில், தூய்மையான சமையல் எரிவாயுவை காங்கிரஸ் வழங்கும். உஜ்வாலா பயனாளிகளில் ஆண்டுக்கு 3.7 என்ற தற்போதைய அற்ப சராசரியிலிருந்து, எல்பிஜி சிலிண்டர்கள் பயன்பாடு அதிகரிப்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

9. பசுமை மாற்றம் மற்றும் 2070-க்குள் கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத இலக்கை அடையவும் தேவையான நிதியுதவியை வழங்க ஏதுவாக, மாநில அரசுகள் மற்றும் தனியார் துறையுடன்

இணைந்து, இந்திய பசுமை மாற்ற நிதியம் ஒன்றை நாங்கள் ஏற்படுத்துவோம்.

10. பேரிடர் மேலாண்மையை மனிதர்களோடு மட்டும் நிறுத்திவிடாமல், அழியும் நிலையில் உள்ள வன விலங்குகள், வீட்டு விலங்குகள், செல்லப் பிராணிகள் மற்றும் கால்நடைகளுக்கும் நாங்கள் விரிவுபடுத்துவோம்.

11. தேசிய தழுவல் நிதியத்திற்கான ஒதுக்கீட்டை நாங்கள் அதிகரிப்பதோடு, அந்த நிதியத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களும் மறு ஆய்வு செய்யப்படும்.

12. 2008 தேசிய பருவநிலை மாற்ற செயல் திட்டத்திலிருந்து, தேசிய பருவநிலை மறுமலர்ச்சி மேம்பாட்டு இயக்கத்திற்கு நாங்கள் மாறுவதன் மூலம், வளர்ச்சி தொடர்பான அனைத்துத் துறையினரும், நடவடிக்கை மற்றும் மதிப்பிடத்தக்க இலக்குகளுக்கான செயல்திட்டத்தை வழங்குவது உறுதிசெய்யப்படும்.

13. மனிதர்களுக்கும், வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்து வருகிறது. நாங்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, மோதல் ஏற்படும் பகுதிக்கேற்ற தீர்வு காண்போம்.

## நீர் மேலாண்மை மற்றும் துப்புரவு

உலகின் மொத்த மக்கள்தொகையில் 18 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியா, 4 சதவீத நீர்வளத்தை மட்டுமே கொண்டுள்ளது. பருவநிலை மாற்றம் மற்றும் பருவம்தவறிய பருவமழை போன்றவையும், விவசாயிகள், தொழிற்சாலைகள், நுகர்வோர் மற்றும் பிறருக்குத் தண்ணீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றன.



- மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தின் பணிகளை காங்கிரஸ் விரிவுபடுத்தி, தண்ணீர் சார்ந்த அனைத்து நடவடிக் கைகள் மற்றும் துறைகளையும் ஒரே அமைப்பின்கீழ் கொண்டுவருவோம்.
- அனைத்து மாநகரங்கள், நகரங்கள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகளிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு வதற்கான நாடுதழுவிய திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம்.
- மழைநீர் சேகரிப்பு கட்டாயமாக்கப் படும். அனைத்து கடலோரப் பகுதிகளிலும், கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலைகள் நிறுவப்படும்.
- அனைவருக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்யவும், ஜனநாயக முறையில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதிலும், காங்கிரஸ் சிறப்புக் கவனம் செலுத்தும். அணைக்கட்டுகள் மற்றும் நீர்நிலைகளின் சேமிப்புத் திறனில் கவனம் செலுத்துவது, நிலத்தடி நீர்வளத்தை அதிகரிப்பதன் மூலம், இப்பிரச் சினைக்குத் தீர்வு காண்பதுடன், நீர் மேலாண்மையில், மாநில அரசுகள்,

உள்ளூர் சமுதாய அமைப்புகள், விவசாயிகள், பஞ்சாயத்துகள் மற்றும் கிராமசபாக்கள் மற்றும் நகராட்சி களையும் ஈடுபடுத்தக் கூடிய பெரும் திட்டங்களை உருவாக்குவோம்.

- ஆறுகளில் கழிவுநீர் கலக்கப்படுவதால், நம்நாட்டில் உள்ள ஆறுகள் மாசுபடுத்தப் படுகின்றன. ஆறுகளில் எவ்வித கழிவு களையும் கலப்பதை, சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்துவோம். பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள், தேவையான சட்டங்களை வகுத்து கழிவுகளை வெளியேற்றுவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.
- மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலைக்கு காங்கிரஸ் முடிவுகட்டும். கழிவுஅகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு, அவர்களுக்கு மறு திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலை வழங்குவதன் மூலம், அவர்களது வாழ்க்கை கண்ணிய மானதாகவும், பாதுகாப்பானதாகவும் அமைவது உறுதி செய்யப்படும். மனிதர்கள் கழிவு அகற்றுவதைத் தடுக்கும் சட்டம், 2013, கடுமையாக நடைமுறைப்படுத்து வதுடன், கழிவு அகற்றும் பணியில் மனிதர்களை ஈடுபடுத்தும் எந்தவொரு நபரும் தண்டிக்கப்படுவார். கழிவுகளை அகற்றும் பணியின்போது உயிரிழக்க நேரிடுவோருக்கு, ரூ.30 லட்சம் இழப்பீடாக நாங்கள் வழங்குவோம். கழிவுநீர் கால்வாய்கள், கழிவுநீர்த் தொட்டிகள் மனிதக் கழிவுகள் அகற்றும் பணிக்குத்தேவைப்படும் இயந்திரங்களை வாங்குவதற்குத் தேவையான நிதியை நாங்கள் ஒதுக்கீடு செய்வோம். அனைத்து துப்புரவுத் தொழிலாளர்களுக்கும், இலவச காப்பீடு வழங்கப்படும்.
- மாநில அரசுகளுடன் இணைந்து, 10 ஆண்டுகளில், அனைத்து நகரங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான விரிவான திட்டம் செயல்படுத்தப்படும்.



# ஒரு வேண்டுகோள்

*பிஜேபி / தேசியக் கூட்டணி அரசாங்கத்தின் பத்து ஆண்டு கால அரசாங்கம் மிகைப்படுத்துதல்களுக்கும் விளம்பரங்களுக்கும் பெயர் பெற்றது. வெறுமை நிறைந்தது. செயல்திறன் அற்றது. பொருளாதாரம் திருப்தி அளிப்பதாக இல்லை, வேலைவாய்ப்பின்மை மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. பணவீக்கம் ஏராளமாக அதிகரித்திருக்கிறது. நுகர்வு குறைந்திருக்கிறது. மிகச் சாதாரண வளர்ச்சியையும் கூட இந்த நிலைமைகள் பலவீனமடையச் செய்திருக்கின்றன.*

*ஏழைகளும் நடுத்தர மக்களும் நியாயமற்ற வகையில் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர். நாட்டில் நிலவிவரும் சூழல் வெறுப்பு நிறைந்ததாகவும் பிளவுபடுத்துவதாகவும் உள்ளது. அரசமைப்பு விழுமியங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு பெரும்பான்மைவாதம் முன்னால் வந்து நிற்கிறது.*

*சமமின்மை அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த மக்களும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.*

*இந்தச் சமயத்தில் இந்திய மக்கள் அனைவருக்கும் தேவைப்படுவது, கடந்த 10 ஆண்டுகளாக நடைபோட்ட பாதையிலிருந்து தீர்க்கமான முறையில் விலகிச் செல்வதுதான். ஒட்டுமொத்த வளர்ச்சி, சமத்துவம், சமப்பகிர்வு, சுதந்திரம், நீதி ஆகியவற்றிற்கான பாதையில் பயணிக்கவே மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய புதிய பாதையில் மக்கள் நடைபோடுவதற்கு அவர்களுக்குத் தலைமை தாங்கும் சக்தி காங்கிரசுக்குத்தான் இருக்கிறது.*

*வரலாறு கற்பித்திருக்கும் பாடங்கள் உங்கள் முன்பாக இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி தேசத்திற்கு விடுதலை பெற்றுத் தந்தது. காங்கிரஸ் குடியாட்சிக்கான அடித்தளத்தை அமைத்தது. 1950கள் முதல் 1960கள் வரையிலும் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை காங்கிரஸ் வழிநடத்தி வந்திருக்கிறது. காங்கிரஸ் அரசுகள் 1965ஆம் ஆண்டிலும், 1971ஆம் ஆண்டிலும் போர்களைச் சந்தித்துள்ளன. இந்தியாவின் ஒற்றுமையையும்*

*ஒருமைப்பாட்டையும் பாதுகாத்துள்ளது. 1991இல் காங்கிரஸ் முன்னுதாரணமான மாற்றங்களை அறிமுகப்படுத்தி மனதில் பதியக்கூடிய வளர்ச்சியை சாதித்துக் காட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மோசமான தாராளமயத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் எதிரான அரணாக இருந்து போராடி வந்திருக்கிறது. அநீதிக்கும், ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கும் எதிரான மக்களின் போராட்டத்தில் காங்கிரஸ் மக்களுடன் நின்றிருக்கிறது.*

*வரலாறு கற்பித்திருக்கும் பாடங்களை மனதில் கொண்டு இந்திய தேசிய காங்கிரசின் மீது நம்பிக்கை வைக்குமாறு காங்கிரஸ் உங்களைக் கேட்டுக் கொள்கிறது.*

*அதிகமான சுதந்திரத்தையும், வேகமான, சரிசமமான வளர்ச்சியையும், நீதியையும் அனைவருக்கும் வழங்கிடுவோம் என்று நாங்கள் உறுதி கூறுகிறோம். இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு கை சின்னத்தில் வாக்களியுங்கள்.*

*காலத்தால் அழியாத தாகூரின் 'கீதாஞ்சலி' எனும் கவிதையை நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய தருணம் இது.*

மனம் அச்சமின்றி தலைநிமிர்ந்து இருக்கும் இடத்தில்
அறிவு சுதந்திரமாகச் செயல்படக்கூடிய இடத்தில்
குறுகிய சுவர்களால் உலகம் துண்டாடப்படாத இடத்தில்
சத்தியத்தின் அடியாழத்திலிருந்து வார்த்தைகள் வெளிப்படும்.
அயராத முழு முயற்சியை நோக்கி கரங்கள் நீளும் இடத்தில்
புதையுண்ட பழக்கத்தின் பாலைநில மணலுக்குள்
தெளிந்த பகுத்தறிவு நீரோடை தன் வழியை இழந்துவிடவில்லை.
இங்கு மனம் சிந்தனையிலும் செயலிலும் எப்போதும் விரிவடைகிறது.
சுதந்திர சொர்க்கபுரியில் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகிறது.
ஓ... தந்தையே என் தேசம் விழித்திருக்கட்டும்.



# வளர்ச்சிமிகு
# இந்தியாவை
# வழிநடத்தியவர்கள்